Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 524 சுபகிருது வருடம், வைகாசி மாதம் 05ஆம் திகதி வியாழக்கிழமை
(19.05.2022) ஹிஜ்ரி - 1443, ஷவ்வால் - 17 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

## 65,000 மெட்ரிக் தொன் யூரியா ஜூனில் இறக்குமதி செய்யப்படும்

இந்திய கடன் திட்டத்தின் கீழ் அடுத்த மாதம் முதல் வாரத்தில் 65,000 மெட்ரிக் தொன் யூரியாவை இறக்குமதி செய்ய திட்டமிட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், விவசாயிகளுக்கு சேதன உரங்களுக்கு மேலதிகமாக யூரியா உரமும் வழங்கப்படுமென விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

02 பக்கம்

## மஹிந்தவும் நாமலும் நாடாளுமன்றம் வருகை

யோ.தர்மராஜ்

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் நேற்று நாடாளுமன்றத்துக்கு வருகை தந்திருந்தனர்.

கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தை யடுத்து தன்னுடைய பதவியை இராஜினாமா செய்த முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நாட்டில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களால் திருகோணமலை கடற்படை முகாமிற்குச் சென்று தனது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொண்டார்.

02 பக்கம்

## விடுதலையானார் பேரறிவாளன்



11 பக்கம்

## காலிமுகத்திடல் தாக்குதலை ஐ.ஜி.பி. தடுத்து நிறுத்தவில்லை



ரமேஷ் பத்திரண எம்.பி. தெரிவிப்பு

02 பக்கம்

## நாட்டைக் காக்கவே முன்வந்துள்ளேன் ராஜபக்ஷமாரை பாதுகாக்கவல்ல!

நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் ரணில்



யோ.தர்மராஜ்

நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு நிறைய விடயங்கள் உள்ளன. ஆனால், இங்கு வந்து என்னையே குற்றம் சுமத்திக்கொண்டு பழைய அரசியலையே முன்னெடுக்கின்றீர்கள். காலிமுகத்திடலில் 'கோட்டா கோ கம'விலுள்ள இளைஞர்களுக்கும் இந்த பழைய அரசியல் கலாசாரம் வெறுத்துப் போயுள்ளது.

02 பக்கம்

# தமிழர் மீதான வன்முறை இன்று சிங்களவர் மீதும்!

அதே ஆட்டம்தான் தொடர்வதாக நாடாளுமன்றத்தில் மனோ சுட்டிக்காட்டு



"இந்த ஆமதுருக்கள் அரசியலில் வேண்டாம். கைகூப்பி கோருகிறேன். இவர்கள்தான் இத்தனைக்கும் காரணம். சும்மா இந்த வன்முறைகள் பற்றி இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் மாறி மாறி குற்றஞ்சாட்டுவதில் பயனில்லை. அனைத்துக்கும் மூலக் காரணம் இந்த ஆமதுருக்கள்தான். இவர்களை பன்சலைக்கு அனுப்புங்கள். அரசியலில் இவர்கள் வேண்டாம்.

"எங்கள் குருக்கள், இமாம்கள், பாதிரிகள் ஆகியோரும் தத்தம் மத ஸ்தலங்களுக்கு போகவேண்டும். நாடு உருப்படும்."

02 பக்கம்



இறுதிப்போரில் படுகொலை செய்யப்பட்ட தங்களுடைய உறவுகளை நினைவுகூர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபிக்கு அருகில் கதறியழும் உறவுகள். (யாழ் செய்தியாளர்)

## பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எதிர்க்கட்சி அரசுக்கு உதவும்



சபையில் ரணிலுடன் சஜித் கருத்துப்பரிமாற்றம்

யோ.தர்மராஜ்

நாடு நெருக்கடிகளை எதிர்கொள்ளும்போது அரசுக்கு ஒத்துழைப்பை வழங்குவதற்கு எதிர்க் கட்சிகளும் முன்வர வேண்டும் - என ஐக்கிய மக்கள் சக்திக்கு பிரதமர் ரணில் விக்ரமசிங்க அழைப்பு விடுத்தார். பிரதமரின் அழைப்பை ஏற்று அரசுக்கு உதவ தாங்கள் முன்வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பிரதமரிடம் உறுதியளித்தார்.

02 பக்கம்

## சனத் நிஷாந்த, மிலானுக்கு 25ஆம் திகதிவரை விளக்கமறியல்

02 பக்கம்

## குழந்தைகளுக்கு திரிபோஷா இல்லை; அரசியல்வாதிகளுக்கு நட்டஈடா?

தவறு என்கிறார் சஜித் பிரேமதாச

யோ.தர்மராஜ்

நாட்டில் கர்ப்பிணித் தாய்மாருக்கும் குழந்தைகளுக்கும் திரிபோஷா இல்லாதபோதும், தொழிற்சாலைகள் மூடப்படும்போதும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு மானியம் இல்லாதபோதும் வன்முறையில் பாதிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கு முக்கியத்துவம் கொடுக்க வீடமைப்பு அமைச்சருக்கு எவ்வித உரிமையுமில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

02 பக்கம்

## பெற்றோலுக்கு கடும் தட்டுப்பாடு: வரிசைகளில் நிற்கவேண்டாம்

அமைச்சர் காஞ்சன கோரிக்கை



யோ.தர்மராஜ்

நாட்டுக்குத் தேவையான டீசல் கையிருப்பில் இருந்தாலும் பெற்றோல் மற்றும் எரிவாயு விநியோகத்தில் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

தேவையான தொகையுடன் கப்பல் வந்திருந்தாலும் அவற்றை தரையிறக்குவதற்கு காலதாமதம் செல்லும் என்பதால் எதிர்வரும் இரு நாட்கள் பெற்றோல் மற்றும் எரிவாயுவுக்காக வரிசையில் காத்திருக்க வேண்டாம் - என வலுசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

02 பக்கம்

## வன்முறைகளுக்கு அழைத்துவரப்பட்டோர் விபரங்கள் இருப்பதாக கூறும் அநுரகுமார!



நாடாளுமன்றத்தில் நேற்று காரசாரம்

யோ.தர்மராஜ்

நாட்டில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தின்போது, மஹியங்கனை சந்தியிலிருந்த மனநோய்க்குட்பட்ட யாசகர்களும் அலரிமாளிகைக்கு அழைத்துவரப்பட்டிருந்தனர் - என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

02 பக்கம்



### உஷ்

ரணிலின் அமைச்சரவையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. ஒருவர் இடம்பெற ஏற்பாடு நடந்தது. அதற்கான தூதை எம்.பி. ஒருவரே ரணிலுக்கு அனுப்பினார். பேச்சு வெற்றிகரமாக நடக்கவில்லை என்று தகவல். கெபினட் அமைச்சு வழங்க ரணில் உடன்படவில்லையாம்.

## ஜனாதிபதி பதவி விலகுவது தொடர்பில் ஏகோபித்த கருத்து அவசியமானது

ஹரீன், மனுஷவுக்கு பிரதமர் கடிதம்

03 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



மஹிந்தவும் நாமலும் பார்லிமெண்ட்டுக்கு பாதுகாப்பாக வந்தாங்கள் எண்டதே ஒரு செய்தியாப்போச்சு பாருங்கோ... அதுகும் மே 18ஆம் திகதி...



## தமிழர் மீதான...

என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு எம்.பியுமான மனோ கணேசன் நேற்று நாடாளுமன்ற சபையில் சிங்கள மொழியில் சுட்டிக்காட்டினார்.

ஆளுங்கட்சி எம்.பிகளின் மீது கடந்த சில நாட்களாக நடத்தப்பட்ட வன்முறைகள் தொடர்பில் நடந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய மனோ எம்.பி. மேலும் கூறியதாவது,

"இன்றைய தினங்களில், 2009ஆம் ஆண்டில் தமிழ் மக்கள், நூறு, ஆயிரம், இலட்சக்கணக்கில், கொல்லப்பட்டார்கள். கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்களில் கொல்லப்பட்டார்கள். Indiscriminate shelling and aerial bombing"

"இன்று ஆளும் அணி அமைச்சர்களின் வீடு, சொத்துகளை எரித்து கொலை செய்த இந்த வன்முறை, அமரகீர்த்தி என்ற அப்பாவி எம்.பியை அடித்தே கொலை செய்த வன்முறைகள், இந்த யுத்தம் மற்றும் 1983, 1977, 1958 இனக்கலவரங்களிலேயே ஆரம்பித்தது.

இந்த தீவைப்பு தமிழர்களாகிய எங்களுக்கு புதிதல்ல. 1983 எங்கள் ஹெவ்லெக் வீதி வீட்டை கொளுத்தினார்கள். எங்கள் புறக்கோட்டை வியாபார நிலையத்தை கொளுத்தினார்கள். ஒரு கம்பீரமான சினிமா கலைஞரான என் தந்தை அதன் பின் மனமுடைந்து சில காலம் வாழ்ந்து இறந்து போனார்.

"இதோ இந்த ஆசனத்தில்தான் என் நண்பன் ரவிராஜ் அமர்ந்திருந்தான். இன்றுள்ள டி.என்.ஏ. எம்.பிக்கள் புதியவர்கள். அவர்களுக்கு அவரை தெரியாது. ஆனால் எனக்கு நன்கு தெரியும். கொழும்பில் வாழ்ந்த நாம் இருவரும் 2001ஆம் ஆண்டில் இருந்தே நல்ல நண்பர்கள். சிங்கள மக்களுக்கு தமிழர் பிரச்சினையை சிங்களத்தில் சொல்ல முயன்றதற்காக ரவிராஜ் கொல்லப்பட்டார்.

அன்று நானும், ரவியும் சேர்ந்து பலவந்த கடத்தல், சட்டவிரோத படுகொலைகள், வெள்ளை வேன் கலாசாரத்துக்கு எதிராக போராடினோம். என்னையும் ராகமை, களுத்துறை, தெமட்டகொடை ஆகிய மூன்று இடங்களில் கொல்ல முயன்றார்கள்.

இந்த வன்முறை ஆட்டம்தான் இன்றும் தொடர்கிறது. முதல் அரசியல் கொலையை, 1959இல் பண்டாரநாயக்காவை கொலை செய்து, ஒரு பௌத்த ஆமதுரு ஆரம்பித்து வைத்தார். அதன்பின் பௌத்த மதத்தை அரசியலில் கலக்கவிட்டு, இந்நாட்டை அழித்து விட்டீர்கள்.

இந்த ஆமதுருக்கள் அரசியலில் வேண்டாம். கைகூப்பி கோருகிறேன். இவர்கள்தான் இத்தனைக்கும் காரணம்.

நாம் ஆமதுருமார்களை பன்சலைக்கும், குருக்கள்மார்களை கோவிலுக்கும், இமாம்களை பள்ளிவாயல்களுக்கும், பாதிரிகளை தேவாலயங்களுக்கும் போகச் சொல்வோம். இவர்கள் இங்கே வேண்டாம். அரசியலில் வேண்டாம்.

இந்த சபையில் ஒரு ஆமதுரு மந்திரி இன்று இருக்கிறார். அவரே இங்கு வந்த கடைசி மந்திரியாக இருக்க வேண்டுமென எதிர்பார்க்கிறேன்.

இந்நாட்டின் இன்றைய சீரழிவுக்கு இவர்கள்தான் காரணம். எவருக்கும் இவர்களது அறிவுரை வேண்டுமென்றால், அவர்களது மதஸ்தலங்களுக்கு போய் கேட்கலாம். இங்கே வேண்டாம்.

கடந்த தேர்தலின்போது ஒரு கேலிகூத்து நடந்தது. களனி விகாரை ஆமதுரு சொன்னார். களனி கங்கை ஆறு இரண்டாக பிளந்ததாம். டோம் என சத்தம் வந்ததாம். பாதாளத்தில் இருந்து நாகராஜன் வந்தாராம். நாட்டை காக்க ஒரு மன்னன் வருகிறான் என ஒரு அசரீதி கேட்டதாம். என்ன ஒரு கேலிக்கூத்து இது! இப்படி வெட்கமில்லாமல் சொன்ன அந்த ஆமதுரு இன்று களனி பல்கலைக்கழக உபவேந்தராம். வெட்கம்...! சும்மா இந்த வன்முறைகளை பற்றி, இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் மாறி மாறி குற்றம் சாட்டுவதில் பயனில்லை. அனைத்துக்கும் மூல காரணம் இந்த ஆமதுருகள்தான். இவர்களை பன்சலைக்கு அனுப்புங்கள். எங்கள் குருக்கள், இமாம்கள், பாதிரிகள் ஆகியோரும் தத்தம் மத ஸ்தலங்களுக்கு போக வேண்டும். நாடு உருப்படும். - என்றார்.

## காலிமுகத்திடல் தாக்குதலை...

காலிமுகத்திடல் போராட்டத்துக்கு தாக்குதல் நடத்தப்பட்டபோது அதனை தடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, உத்தரவிட்டபோதும், பொலிஸ் மா அதிபரே அதனை தடுத்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பதவி விலகிச் செல்லும்போது அவருக்கு பிரியாவிடை வழங்குவதற்காக தாமும் அலரி மாளிகைக்கு சென்றிருந்ததாக குறிப்பிட்ட அவர், இதன்போது வருகைத்தந்திருந்த மக்கள் பிரதிநிதிகள் சிலர், கூட்டத்துக்கு வந்திருந்தவர்கள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டதாகவும், இதனையடுத்தே சிலர் காலிமுகத்திடல் தாக்குதலுக்கு சென்றதாகவும் தெரிவித்தார்.

எனினும், தாம் பொலிஸ் அதிகாரி தேசபந்து தென்னக்கோனை தொடர்புகொண்டபோது, தாம் தாக்குதலை தடுக்க அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். இதன் பின்னர், தாம், ஜனாதிபதியுடன் சந்திப்பு ஒன்றுக்காக சென்றிருந்தபோது, தாக்குதல் தீவிரமடைந்தமை குறித்து தகவல் வந்ததும், ஜனாதிபதிக்கு அதனை தான் தெரிவித்ததாக ரமேஷ் பத்திரண குறிப்பிட்டார்.இதன்போது ஜனாதிபதி, தேசபந்து தென்னக்கோனுடன் தொடர்புகொண்டு வினவியபோது, தாக்குதல்காரர்கள் மீது பொலிஸ் மா அதிபரே தம்மை கண்ணீர்ப் புகைப்பிரயோகம் செய்யவேண்டாம் என்று கூறியதாக தெரிவித்துள்ளார்.

எனினும், நாட்டின் ஜனாதிபதி உத்தரவிடுகின்றபோது அதனை நிறைவேற்றுமாறு தெரிவித்த பின்னரே, தாக்குதல்காரர்கள் மீது கண்ணீர்ப் புகைப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதன் காரணமாக, இந்தத் தாக்குதல் இடையிலேயே நிறுத்தப்பட்டது.

## சனத் நிஷாந்த,...

கொழும்பு குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சனத் நிஷாந்த மற்றும் மிலான் ஜயதிலக்க ஆகியோர் எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரையும் நேற்று கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 9ஆம் திகதி அலரிமாளிகை மற்றும் காலிமுகத்திடலில் நடந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக சனத் நிஷாந்த மற்றும் மிலான் ஜயதிலக்க ஆகியோர் நேற்றுமுன்தினம் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை தவிர டேன் பியசாத், மொறட்டுவை மாநகர மேயர் சமன் லால் பெர்னாண்டோ உட்பட மேலும் பலர் நேற்று குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

## வன்முறைகளுக்கு...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (18) ஆரம்பமாகிய நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத்தில் எங்களை இலக்கு வைத்தே தாக்குதல் நடத்தப்படுகின்றது. மக்கள் இயக்கம் என்ற வகையில் அரச பயங்கரவாதத்தாலும் வன்முறையாலும் போதுமானளவு அடிவாங்கியவர்கள் இயக்கமாகும். பொறுப்புகளை தட்டிக்கழிக்கமாட்டோம். 1994ஆம் ஆண்டு மீண்டும் அரசியலுக்கு வந்தவுடன், ஜனநாயகம் தொடர்பாகவும் ஜனநாயக அரசியலை பலப்படுத்தி முன்னோக்கிச் செல்ல வேண்டும் என நினைத்தோம்.

1997, 98, 2007, 2010, 2011 ஆம் ஆண்டுகளில் எங்களுடைய தோழர்கள் இருவர் கொலை செய்யப்பட்டனர். ஆனால், நாங்கள் ஒரு கல்லைக் கூட கையில் எடுக்கவில்லை. கடந்த தேர்தல்களில் அரசாங்கத்தின் காட்டுமிராண்டிகளால் எங்களுடைய தோழர்கள் கொல்லப்பட்டனர். ஆனால், நாங்கள் ஒரு கல்லைக் கூட கையில் எடுக்கவில்லை.

17ஆவது அரசியலமைப்புத் திருத்தம் கூட எங்களுடைய தலைமைத்துவத்தினால் வெற்றியீட்டியது. நாங்கள் எப்போதும் ஜனநாயகத்திற்காக முன் நின்றவர்கள். 2010ஆம் ஆண்டு உங்களுக்கு பெரும்பான்மை கிடைத்ததும் 17ஐ நீக்கிவிட்டு, 18 ஆவது திருத்தத்தை கொண்டுவந்தீர்கள். எனினும், நல்லாட்சி அரசாங்கத்தின்போது, 19ஐ கொண்டுவர பாடுபட்டோம். மீண்டும் நீங்கள் ஆட்சிக்கு வந்ததும் 20ஐ கொண்டு வந்தீர்கள். அவ்வாறாயின் யார் ஜனநாயகவாதிகள், யார் கொலையாளிகள்?

1983ஆம் ஆண்டு நாங்கள் தொடர்புபடாத கறுப்பு ஜூலையை உருவாக்கினார்கள். அதன் ஊடாக எங்களுடைய கட்சி உள்ளிட்ட பல கட்சிகளை தடை செய்தனர். அப்போது தமிழ் சகோதரர்களை நாங்கள் பாதுகாத்தோம். சிங்கள சகோதரர்களை தமிழர்கள் பாதுகாத்தனர். ஜனநாயகத்துக்காக நீதிமன்றங்கள் வரை சென்றவர்கள் நாங்கள்.

83 காலப்பகுதியில் ஜனநாயகத்துக்காக போராடியதற்காக எங்களை தடை செய்தனர். அதேபோன்று, ஊழல் மோசடிகளுக்கு எதிராக போராடுகின்றோம். சிறு சிறு அடக்குமுறை குரல்களுக்காக அதனை நிறுத்தமாட்டோம். மக்களின் ஜனநாயகம் மீறப்படும் போது அதற்கு எதிராகவும் மக்கள் பொருளாதார நெருக்கடிக்கு எதிராகவும் போராடுவோம். அதனை ஒருபோதும் கைவிட மாட்டோம். எப்போதும் ஜனநாயகத்திற்காக போராடிய எங்களை இன்று வன்முறை வழி நடத்தியதாகக் கூறுகின்றனர்.

அநுராதபுரத்தில் 12 பேர், கேகாலையில் 8 பேர், தெனியாயவில் 11 பேர், கம்புறுபிட்டியவில் 3 பேர் உள்ளிட்ட பல இடங்களில் கைது செய்யப்பட்டுள்ளவர்களில் எங்களுடைய உறுப்பினர் ஒருவர் கூட இல்லை. 88, 89ஆம் ஆண்டுகளில் அமைச்சர்களின் வீட்டில் சித்திரவதைக் கூடம் நடத்திச் செல்லப்பட்டது. பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட வரலாறுகள் இருக்கின்றன.

இன்றும் உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல்கள் தயாரிக்கப்படுகின்றன. எந்த விசாரணை நடத்தினாலும் எதிர்கொள்ள நாங்கள் தயார். பொலிஸ்மா அதிபர் கூறும் 184 பொலிஸ் நிலையங்களில் இரு நிலையங்களுக்கே தகுதியான பொறுப்பதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். 182 நிலையங்களுக்கும் அரசியல் நியமனமே வழங்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி உறுப்பினருக்கு தேவையான அதிகாரி யார் என்பதை அவர்களே தீர்மானிக்கின்றனர்.

ஆரம்பத்திலிருந்தே போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. எங்கும் வன்முறைகள் இருக்கவில்லை. மக்கள் மத்தியில் பாரிய வெறுப்பு இருந்தது. அவர்களின் கோபத்தை நாட்டுத் தலைவர் புரிந்துகொள்ளவில்லை. இதனை இப்போதும் புரிந்துகொள்ளவில்லை என்றால் பிரச்சினைக்கு தீர்வு இல்லை.

காலிமுகத்திடலில் அமைதியான போராட்டம் நடந்த போது, அலரிமாளிக்கைக்கு வன்முறையாளர்களை அழைத்துவந்தது யார், மஹியங்கனை சந்தியில் மனநோயால் பாதிக்கப்பட்ட யாசகர்களைக் கூட இவர்கள் அலரிமாளிக்கைக்கு அழைத்து வந்துள்ளனர். சிறைக்கைதிகளையும் அழைத்துவந்தனர். அவர்களின் தகவல்கள் என்னிடமுள்ளன. அவர்களுக்கு வைத்தியசாலையில் சிகிச்சை அளித்த தகவலும் என்னிடமுள்ளது.

இவ்வாறு வந்தவர்கள் தாக்குதல் நடத்தினர். எனினும், எங்களில் யாரும் அங்கு வரவில்லை. ஆனால், மக்களுக்கு தாக்குதல் நடத்தினால் நாங்கள் வருவோம். ஆட்சிக்கு வந்த சண்டியர்கள் மக்களுக்கு தாக்குதல் நடத்தினால், அவர்களுக்கு எதிராக நாங்கள் வந்து நிற்போம். மஹிந்த ராஜபக்ஷவே பிரதான சூத்திரதாரியாக இருந்து இந்த வன்முறையை வழிநடத்தினார். அதனை யாராலும் இல்லை என்று கூற முடியாது.

இளைஞர்களுக்கு தாக்குதல் நடத்தும்போது யாரும் பார்த்துகொண்டிருக்கமாட்டார்கள். அதனால், சாதாரண மக்களும் எதிர்ப்பு தெரிவித்தனர். அது பின்னர் வன்முறையாக மாறியது. 1983ஆம் ஆண்டை மீள் நினைவூட்டுகின்றது. இதனை நாங்கள் சரியாக புரிந்துகொண்டுள்ளோம். யாருக்கும் அஞ்சு நாங்கள் அரசியல் செய்யவில்லை. 88ஆம் ஆண்டு என்னுடைய வீடும் தீ வைக்கப்பட்டதால், அந்த வேதனை எனக்கும் தெரியும். எனவே, சுயாதீன விசாரணைகளை முன்னெடுங்கள், அதற்கு முகம்கொடுக்க நாங்கள் தயார் - என்றார்.

## மஹிந்தவும் நாமலும்...

இதனையடுத்து, நாடு சாதாரண நிலைமைக்கு வரும் வரை அங்கிருப்பார் என பாதுகாப்பு அமைச்சர் அறிவித்திருந்தார். இந்த நிலையில், 17ஆம் திகதி முதல் ஆரம்பமான நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்வதற்காக அவர் கடந்த 16ஆம் திகதி கொழும்பு வந்தடைந்ததாக உயர் மட்டத் தகவல்கள் தெரிவித்தன.

எனினும், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சபை அமர்வில் பெசில் ராஜபக்ஷ மற்றும் சமல் ராஜபக்ஷ உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்த போதிலும், முன்னாள் பிரதமரும் அவருடைய மகனும் கலந்துகொள்ளவில்லை.

இந்த நிலையில், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (18) ஆரம்பமாகிய நாடாளுமன்ற சபை அமர்வில் முன்னாள் பிரதமரும் அவருடைய மகன் நாமல் ராஜபக்ஷவும் கலந்துகொண்டிருந்தனர்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்த பின்னர் நேற்றே சபை அலுவல்களில் கலந்துகொண்டார்.

## பிரச்சினைகளைத்...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (18) ஆரம்பமாகிய நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்களின் கலந்துரையாடல் வருமாறு,

பிரதமர் ரணில் விக்ரமசிங்க

உலக வங்கி எங்களுக்கு 160 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது. எனினும், தற்போது அதனை அவசரத் தேவையாகவுள்ள பெற்றோலை கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்துவதற்கு அனுமதி கொடுப்பார்களா என்றால் என்னை பொறுத்தவரை இல்லை என்றே கூற முடியும்.

எனினும், உலக வங்கி குழுவொன்று இலங்கையில் இருப்பதால் அவர்களுடன் இன்று (நேற்று) பேச்சுவார்த்தை நடத்தி அந்த நிதியை அவசரத் தேவைக்கு பயன்படுத்திக்கொள்ள அனுமதித்தால் அது எங்களுக்கு அதிர்ஷ்டமாகும்.

விசேட குழுக்களின் தலைமைப் பதவிகளை எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொண்டால், பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த முடியும். ஹர்ஷ டி சில்வா எங்களுடன் இணைந்து செயற்படுவதாகக் கூறியது எங்களுக்கு மகிழ்ச்சியான விடயமாகும். அரசுக்கு ஒத்துழைப்பை வழங்கி எதிர்க்கட்சியும் உதவ வேண்டும். அவர்களுக்கு இதை செய்ய நேரம் இருக்குமோ தெரியவில்லை. அவர்கள் என்னை அகற்றவே 24 மணிநேரமும் சிந்திக்கின்றனர். எங்களுடைய 'உஸ்ம' வேலைத்திட்டத்தின் கீழ் மருந்துப்பொருட்களை உடனடியாக பெற்றுக்கொள்ள உதவுங்கள். எங்களிடம் 14 வகையான மருந்துப் பொருட்கள் இல்லை.

இதில் ஒன்றை பெற்றுக்கொடுக்க நீங்கள் இணக்கம் தெரிவித்தால், தூதுவர்களுக்கு அறிவித்து, எங்களுடைய சுகாதார அமைச்சிலிருந்தும் இருவரை தருகின்றோம். முடிந்தால் 'உஸ்ம' வேலைத்திட்டத்தின் கீழ் ஒரு வகை மருந்து வகையையாவது பெற்றுத்தர உதவுங்கள். நாம் ஒன்றாக செயற்படுவோம் என அழைப்பு விடுத்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

எங்களால் முடியாததை ஏற்றுக்கொள்ள மாட்டோம். எனவே, மருத்துவ உபகரணங்களை பெற்றுக்கொடுக்க உதவுகின்றோம். ஆனால், மருந்து வகைகளின் தகவல்களை தாருங்கள் நான் உங்கள் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு அதற்குரிய ஏற்பாடுகளை செய்கிறேன்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க

எங்களுக்கு மருந்துகள் அவசரமாக தேவை. நீரிழிவு, இருதய நோய்களுக்கான மருந்து கொழும்பில் இருந்தாலும் பின்தங்கிய பகுதிகளில் இல்லை. அதனால் அதனை உடனடியாக பெற்றுக்கொடுக்கவேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

உயிர்காக்கும் மருத்துவ உபகரணங்களை என்னால் பெற்றுக்கொடுக்க முடியும் என்பதை உறுதியளிக்கின்றேன். முக்கியமான ஒரு வகை மருந்தை குறிப்பிட்டால் அதனை பொறுப்பேற்று பெற்றுக்கொடுக்க முயற்சிக்கின்றேன். ஆனால், நாங்கள் எதிர்க்கட்சி என்பதால் உலக நாடுகள் எங்களுக்கு நிதி உதவி செய்யுமா என்பது தெரியவில்லை. எனினும், உயிர் காக்கும் மருந்துகளை பெற்றுக்கொடுக்க என்னால் முடிந்த முயற்சிகளை செய்கின்றேன்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க

தனியார்த்துறையினரிடமாவது பெற்றுத் தாருங்கள். பரவாயில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

உங்களை அகற்றுவதற்கு எங்களுடைய கட்சி 24 மணி நேரமும் 365 நாட்களும் செயற்படவில்லை. உங்களுடன் ஒத்துழைக்க முயல்கிறோம். உங்களுக்கு தேவையான ஆதரவை வழங்குவோம். உங்களுக்கு ஒரு ஆசனம் இருந்தாலும் நீங்கள் முன்னாள் பிரதமர். அதிக தடவைகள் பதவி வகித்துள்ளீர்கள்.

நான் மதிக்கும் மதிப்பிற்குரிய அரசியல் தலைவர் நீங்கள். என்னுடைய தந்தை பிரேமதாச மறைவின் பின்னர் பலர் உங்களுக்கு துரோகம் செய்தாலும் நாங்கள் உங்களுடன் இருந்திருக்கிறோம். உங்களை அகற்றுவதற்கான தேவை எங்களுக்கில்லை. நீங்கள் தனி மனிதர். உங்களுக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்குகின்றோம்.

## பெற்றோலுக்கு கடும்...

நாட்டில் 4 மில்லியன் வெற்று சிலிண்டர்கள் காணப்படுவதால் ஒரு நாளைக்கு 80 ஆயிரம் எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகித்தாலும் தட்டுப்பாடு வழமைக்கு திருப்புவதற்கு சுமார் 20 நாட்கள் வரை செல்லும் எனவும் அவர் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (18) ஆரம்பமாகிய சபை அமர்வில் வாய்மூல கேள்விக்கான விடை நேரத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் விளக்கமளிக்கையில்,

நாட்டிலுள்ள எரிபொருள் தொகை, கொள்வனவு செய்வதில் எங்களுக்கு இருக்கும் சவால்கள் குறித்து பிரதமர் தன்னுடைய உரையில் தெளிவாக குறிப்பிட்டிருந்தார். அதன்படி, எங்களுக்கு தேவையான டீசல் கிடைக்கப்பெற்றுள்ளது. நேற்று (நேற்று முன்தினம்) முதல் அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் சுப்பர் டீசல் மற்றும் ஓட்டோ டீசல்களை விநியோகிக்க ஆரம்பித்துள்ளோம்.

நாட்டிலுள்ள ஆயிரத்து 190 எரிபொருள் நிலையங்களில் இன்று (நேற்று) மாலை முதல் தொடர்ந்து டீசல் விநியோகிக்கப்படும். ஓரிரு நாட்களில் இந்த விநியோகம் நிறுத்தப்படாது. எதிர்வரும் இரு வாரங்களுக்கு மேலாக டீசல் விநியோகத்தை முன்னெடுப்போம்.

எனினும், பெற்றோல் தொடர்பாக எங்களிடம் பிரச்சினையுள்ளது. கடந்த நாட்களில் பிரதமரின் உரையின்போது கூட, ஒரு நாளுக்கு தேவையான பெற்றோலே எங்களிடம் இருப்பதாக கூறினார். மார்ச் மாதம் 28ஆம் திகதி முதல் கடற்பரப்பில் பெற்றோல் தாங்கிய கப்பல் நங்கூரமிட்டுள்ள போதிலும், நாட்டிலுள்ள நிதி நெருக்கடியால் டொலரை செலுத்தி அந்த கப்பலை விடுவிப்பதற்கு முடியாதுள்ளது.

இதேவேளை, கடந்த ஜனவரி முன்னரும் எங்களுக்கு விநியோகத்துக்காகவும் 53 மில்லியன் டொலரும் செலுத்த வேண்டியுள்ளது. இதனால், இந்த தொகையும் தற்போது செலுத்த வேண்டிய தொகையையும் செலுத்தாது, குறித்த கப்பலை விடுவிக்க முடியாது என அந்த நிறுவனம் கூறியுள்ளது. எனினும், முன்னைய தொகையை செலுத்துவதற்கு மத்திய வங்கி கடிதம் அனுப்பியுள்ளதால், தற்போது வந்துள்ள கப்பலுக்கான தொகையை செலுத்தி பெற்றோலை பெற்றுக்கொள்ள குறித்த நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது. இதனால், இன்று (நேற்று) மற்றும் நாளை (இன்று) ஆகிய இரு நாட்களுக்குள் தேவையான நிதியை திரட்டி குறித்த பெற்றோல் கப்பலை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளோம். இதனாலேயே எரிபொருள் வரிசையில் காத்திருக்க வேண்டாம் எனக் கோரிக்கை விடுத்தோம். டீசல் விநியோகத்திற்கு எவ்வித பிரச்சினையுமில்லை. எனவே, இன்றும் (18) நாளையும் (19) பெற்றோலுக்காக வரிசையில் காத்திருக்க வேண்டாம்.

கையிருப்பிலுள்ள பெற்றோலை அம்பியூலன்ஸ் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளுக்காகவே விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். எனவே, அனைத்து எரிபொருள் நிலையங்களுக்கும் பெற்றோலை விநியோகிப்பதற்கு வெள்ளிக்கிழமை வரையான மூன்று நாட்கள் தேவைப்படலாம். சனி அல்லது ஞாயிற்றுக்கிழமைகளிலேயே பெற்றோலையும் டீசலையும் தட்டுப்பாடின்றி விநியோகிக்க முடியும். எதிர்வரும் இரு நாட்களுக்கு வரிசையில் காத்திருந்தாலும் எங்களால் எரிபொருளை வழங்க முடியாது.

கடன் கடிதத்தை விடுவித்து எங்களால் பெற்றோலை பெற்றுக்கொள்ள முடியாது. முழுமையான தொகையை செலுத்தியே எரிபொருளை பெற்றுக்கொள்ள வேண்டும். அதன்படி, எரிபொருள் இறக்குமதிக்காக ஜூன் மாதத்திற்கு மாத்திரம் 530 மில்லியன் டொலர் தேவையாகும்.

இதேவேளை, கடந்த 16 மற்றும் 17ஆம் திகதிகளில் இரு எரிவாயு கப்பல்களுக்கு தேவையான நிதியை பிரதமர் உள்ளிட்ட நிதி அமைச்சும் இணைந்து செலுத்தியுள்ளது. இதனையடுத்து, இரு கப்பல்களும் கடற்பரப்பை அண்மித்துள்ளபோதிலும் காலநிலை மாற்றத்தினால் வழமையாக களஞ்சியப்படுத்தும் இடத்தில் எரிபொருளை களஞ்சியப்படுத்த முடியவில்லை.

இதனால், கொழும்பு துறைமுகத்தில் எரிவாயுயை களஞ்சியப்படுத்தி பௌசர் ஊடாகவே லிட்ரோ நிறுவனத்திற்கு கொண்டுச் செல்லப்படுகின்றன. இன்று (நேற்று) காலை முதல் சந்தைக்கு எரிவாயுவை விநியோகிக்க எதிர்பார்த்திருந்தபோதிலும், தற்போது அது முடியாது என்பதால் நாளை (இன்று) முதலே சந்தைக்கு எரிவாயு விநியோகிக்க முடியும்.

எனவே, பெற்றோலை போன்று எரிவாயுவுக்காக வரிசையில் காத்திருக்க வேண்டாம். இன்று முதல் விநியோகம் முன்னெடுக்கப்பட்டாலும் 80 ஆயிரம் எரிவாயுவே சந்தைக்கு விநியோகிக்க முடியும். 4 மில்லியன் வெற்று சிலிண்டர்கள் இருப்பதால் 80 ஆயிரம் எரிவாயுவை விநியோகித்தாலும் எரிவாயு தட்டுப்பாடு வழமைக்கு திருப்ப சுமார் 20 நாட்கள் செல்லும். எனவே, எதிர்வரும் இரு நாட்களுக்கு எரிவாயுவுக்காகவும் வரிசையில் காத்திருக்க வேண்டாம் - என்றார்.

## நாட்டைக் காக்கவே...

நாங்கள் அனைவரும் குற்றவாளிகளே. முதலில் நாங்கள் அனைவரும் மாறுவோம் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்காருக்கு பதிலடி கொடுத்தார்.

அத்தோடு, நான் பிரதமராக வந்து ராஜபக்ஷக்களை பாதுகாப்பதாகக் கூறுகின்றீர்கள். நான் நாட்டை பாதுகாக்கவே வந்தேன். ராஜபக்ஷக்களே அவர்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (18) ஆரம்பமாகிய நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு, ரணில் விக்ரமசிங்க, பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முன்வந்ததால் அவருக்கு வெளியிலிருந்து ஒத்துழைப்பு வழங்குவோம். ஆனால், அரசியல் டீல் செய்து ராஜபக்ஷக்களை பாதுகாப்பதற்கு முயற்சித்தால் அவருக்கு எதிராக வீதியில் இறங்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்ததற்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதி சபாநாயகர் பதவிக்கு அரசாங்கத்தின் சார்பில் ஏன் புதிய ஒருவரை நியமிக்க வேண்டும் என என்னிடம் அவர் கேள்வி எழுப்பினார். ஆனால், பிரதி சபாநாயகர் பதவிக்கு போட்டியிட்டவர்கள் இருவர் பக்கமும் நான் இருக்கவில்லை. குழுக்கூட்டத்தில் நான் இருந்திருந்தால் ஒருவரை தெரிவு செய்யுமாறு கோரியிருக்க முடியும்.

ஆனால், பிரதி சபாநாயகர் பதவிக்கு பெண் ஒருவரை நியமிக்க வேண்டும என நான் முன்வைத்த யோசனையை இரண்டரை வருடங்களுக்கு பின்னர் ஏற்றுக்கொண்டதற்காக அவருக்கு நன்றி கூறிக்கொள்கின்றேன். இன்னும் இரு நாட்கள் தாருங்கள். ஆளுந்தரப்பிலுள்ளவர்களையும் நான் வழிக்குகொண்டுவருகின்றேன். இரு பக்கத்திலுள்ளவர்களையும் வழிக்கு கொண்டுவந்துவிடுகின்றேன்.

இதேவேளை, என்னை போல யாரும் இல்லை என இவரே கூறினார். அதற்கு ஹென்சார்ட்டில் தேவையான சாட்சியங்களை தருகின்றேன். மேலும், நான் சிறைக்குச் செல்லும் வரை உறங்க மாட்டேன் என மஹிந்தானந்த அளுத்கமகே கூறியதாகவும் கூறினார். உண்மையில் தற்போது அவர் 24 மணித்தியாலமும் சேவையாற்ற முடியும். 2018ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ பிரதமராகியபோது, நான் நாட்டை காட்டிக்கொடுத்ததாகக் கூறினார். 2020ஆம் ஆண்டு எனக்கு எதிராக அதையே மீண்டும் கூறினார். அவர்கள் இருவரும் இணைந்து நான் நல்லவரா எனக் கூறுங்கள்.

நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு நிறைய விடயங்கள் உள்ளன. நான் அரசாங்கத்தை பாதுகாப்பதற்காக வந்ததாக எனக்கு எதிராக குற்றம் சுமத்துகின்றனர். யாரை பாதுகாப்பதற்கும் எனக்கு அவசியமில்லை. அதில் எவ்வித பயனுமில்லை. நேற்று (நேற்றுமுன்தினம்) நான் கூறியதற்கு பின்னர் இரு உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எனவே, தற்போதும் நீங்கள் அனைவரும் பழைய அரசியலையே முன்னெடுக்கின்றீர்கள். நான் பிரதமராக வந்து ராஜபக்ஷக்களை பாதுகாப்பதாகக் கூறுகின்றீர்கள். நான் நாட்டை பாதுகாக்கவே வந்தேன். ராஜபக்ஷக்களே அவர்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

காலிமுகத்திடல் 'கோட்டா கோ கம'விலுள்ள இளைஞர்களுக்கும் இந்த பழைய அரசியல் கலாசாரம் வெறுத்துபோயுள்ளது. நாங்கள் அனைவரும் குற்றவாளிகளே. முதலில் நாங்கள் அனைவரும் மாறுவோம் - என்றார்.

## குழந்தைகளுக்கு...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (18) ஆரம்பமாகிய நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வீடமைப்பு அமைச்சராக பதவியேற்றவுடன் கடந்த 9ஆம் திகதி வன்முறையில் பாதிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார். இது குறித்து மக்களும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வன்முறையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கு முன்னர், எரிவாயு மற்றும் எரிவாயு அடுப்பு வெடித்தவர்களுக்கான நட்டஈடு எங்கே? உரமில்லாது, விவசாயத்தை இழந்து இலட்சக்கணக்கில் நட்டம் ஏற்பட்ட விவசாயிகளுக்கும் தொழிலை இழந்தவர்களுக்குமான நட்டஈடு எங்கே?

எனவே, உறுப்பினர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கு முன்னர், எரிவாயு வெடிப்பு சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உரமில்லாது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் நட்டஈடு வழங்க வேண்டுமல்லவா?

திரிபோஷா நிறுவனம் மூடப்பட்டுள்ளதால், தாயாருக்கும் குழந்தைகளுக்கும் திரிபோஷா இல்லை. ஆனால், தற்போது உறுப்பினர்களுக்கு நட்டஈடு வழங்குவது குறித்து பேசுகின்றனர். இது சரியானதா? இதுவா புதிய கலாசாரம். இதற்காகவா நாங்கள் இங்குள்ளோம்.

இதேவேளை, அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக பணம் அச்சிட வேண்டும் என பிரதமர் கூறினார். எனினும், பணத்தை அச்சிட்டு மக்களுக்கு நட்டமீட்டுவதற்கு அப்பால் இங்குள்ளவர்களுக்கு வழங்கப்படுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது, நிமல் லான்சா உள்ளிட்ட சிலர் பைத்தியம் பிடித்த எதிர்க்கட்சித் தலைவர், நாங்கள் நட்டஈடு கோரவில்லை என்றும் எதிர்க்கட்சி தலைவரின் கருத்துக்கு கடும் எதிர்ப்பையும் வெளியிட்டனர்.

எனினும், அதனை கவனத்தில் கொள்ளாது தொடர்ந்து உரையாற்றிய சஜித் பிரேமதாச,

நிமல் லான்சாவுக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து நாங்கள் கவலையடைகின்றோம். எனினும், இதனை செய்தவர்களை சட்டத்தின் முன்கொண்டுவர வேண்டும். நான் வீடமைப்பு அமைச்சரின் கருத்தையே குறிப்பிட்டேன். கர்ப்பிணி தாய்மாருக்கும் குழந்தைகளுக்கும் திரிபோஷா இல்லாதபோதும், தொழிற்சாலைகள் மூடப்படும் போதும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு மானியம் இல்லாதபோதும் உறுப்பினர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கு முக்கியத்துவம் கொடுப்பதாக கூறுவதற்கு வீடமைப்பு அமைச்சருக்கு எவ்வித உரிமையுமில்லை.

அச்சிடும் பணத்தை அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு மாத்திரம் பயன்படுத்த பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும். நட்டஈடு வழங்குவதாயின் 220 இலட்ச மக்களுக்கும் நட்டஈடு வழங்க வேண்டும்.

ஆட்சிக்கு வந்து இரு மாதங்களில் வரி மானியம் வழங்கினார்கள். அதில் இலாபம் பெற்ற பலர் இருக்கின்றனர். அவர்களிடம் பெற்று இங்குள்ள அனைவருக்கும் நட்டஈடு வழங்க முடியும். 600 பில்லியன் வரி மானியம் பெற்ற கோடிபதிகளிடம் பெற்று மக்களுக்கு மானியம் வழங்குங்கள் - என்றார்.

## 65,000 மெட்ரிக் தொன்...

மேலும், 80,000 மெட்ரிக் தொன் சேதன உரங்கள் உள்ளூர் விவசாய நிலங்களுக்கு சிறு போகத்திற்காக விநியோகிக்கப்பட்டுள்ளன.

4 மில்லியன் லீற்றர் உயிர் திரவ உரங்களும் 3 மில்லியன் லீற்றர் சேதன திரவ உரங்களும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!



கோட்டா கோ கம – கொழும்பு காலிமுகத்திடல்



யாழ். பல்கலைக்கழகம்



சாவகச்சேரி



வாகரை – மாணிக்கபுரம்



கல்லடி

## அத்துகோரளவுக்கு பதிலாக ஜகத் சமரவிக்ரம நியமனம்!

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவின் திடீர் மரணத்தினால் வெற்றிடமான பொலன்னறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு ஜகத் சமரவிக்ரமவின் பெயரை தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானியில் வெளியிட்டுள்ளது. அமரகீர்த்தி அத்துகோரளவின் மரணத்தினால் ஏற் பட்ட வெற்றிடத்திற்கு பொலன்னறுவை, 18ஆம் இலக்க தேர்தல் மாவட்டத்தின் ஒன்பதாவது நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.ஜகத் சமரவிக்ரம தெரிவுசெய்யப்பட்டதாக அரசாங்க வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி பதவி விலகுவது..

*(யோ.தர்மராஜ்)*

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகுவது தொடர்பாக கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பதோடு, அதில் பெரும்பான்மையானோரின் தீர்மானத்துக்கு நானும் இணங்குகிறேன் - என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு ஆதரவளிப்பதாக சில கோரிக்கைகளை முன்வைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார அனுப்பியுள்ள கடிதத்திற்கு பதிலளித்து அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகுவது தொடர்பாக கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பதோடு, அதில் பெரும்பான்மையானோரின் தீர்மானத்துக்கு நானும் இணங்குகிறேன். அத்தோடு, 21ஆவது திருத்தத்தை விரைவில் நிறைவேற்றுவதன் ஊடாக நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைத்து, நாடாளுமன்றத்திற்கு பொறுப்புக்கூறும் நிறைவேற்றுத்துறையை உருவாக்கல்.

கோட்டா கோ கமவிற்கு தாக்குதல் நடத்திய சம்பவத்தை நான் வன்மையாகக் கண்டிப்பதுடன், சட்ட மா அதிபரின் உத்தரவுக்கமைய பொலிஸ் மா அதிபர் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குதல்.

ஆகியவற்றுக்கு முன்னெடுக்கப்படும் விசாரணைகளின் தகவல்களை இரு வாரங்களுக்கு ஒருமுறை சபாநாயகருக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸ் மா அதிபரிடம் நான் கோரிக்கை விடுத்துள்ளேன்.

21ஆவது திருத்தம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷ தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அத்திருத்தத்தை விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்போம்.

ஏப்ரல் தாக்குதல் தொடர்பாக இதுவரை சுயாதீன விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், எனினும், அதற்கு சர்வதேசங்களின் ஆதரவும் வேண்டும் என்றால் அதனை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்போம்.

என்னால் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள தேசிய சபை உருவாக்கும் யோசனையின் ஊடாக அனைவரையும் இணைத்துக்கொண்டு பொது வேலைத்திட்டத்தை நாட்டுக்கு அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுப்போம்.

ஊழல் மோசடிகளுக்கு எதிராக சுயாதீனமாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும். சட்டத்தை நடைமுறைப்படுத்தும் சட்ட மா அதிபர் மற்றும் பொலிஸ்துறைக்கும் யாரும் தேவையற்ற அழுத்தங்கள் பிரயோகிப்பதற்கு இடமளிக்க முடியாது. ஊழல் மோசடிகளை ஒழிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தயங்கமாட்டோம்.

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு உயர் நீதிமன்றமே தீர்ப்பு வழங்கியுள்ளது. இதற்காக விசேட குழுவொன்றை நியமித்து, உயர் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்போம்.

ஜனநாயகத்துக்காக எப்போதும் முன்னிற்கும் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் நாடு சாதாரண நிலைமைக்கு திரும்பியவுடன் நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவது தொடர்பில் நான் எவ்விதத்திலும் எதிர்ப்பை தெரிவிக்கமாட்டேன். எனினும், அதற்கு முன்னர் அடுத்த சில மாதங்களுக்குள் பல அர்ப்பணிப்புகளை செய்து, நாட்டை சாதாரண நிலைமைக்கு கொண்டுவர வேண்டும். சுயாதீன அரசாங்கத்தை உருவாக்குவதற்கு உங்களுடைய ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன்.

# கோப்பாய் பொலிஸ் பிரிவில் இருவேறு விபத்து

## சிறுவன் உள்ளிட்ட நால்வர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் (17) இரவு இடம்பெற்ற இருவேறு விபத்து சம்பவங்களில் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

திருநெல்வேலி, இராமலிங்கம் வீதியில் பூங்கனிச்சோலைக்கு அருகில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இரண்டு மோட்டார்சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் மூன்று இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

கோப்பாய் பூதர் மடத்தடியைச் சேர்ந்த மகேந்திரன் மகிந்தன் (வயது 25), கச்சேரி கிழக்கை சேர்ந்த றொபின்சன் சார்ள்ஸ் (வயது 23) மற்றும் சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகத்தை சேர்ந்த யோகநாதன் மேர்வின் டேனுஜன் (வயது 17) ஆகிய மூவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

ஒரு மோட்டார்சைக்கிளில் இருவரும் மற்றுமொரு மோட்டார்சைக்கிளில் மூவரும் பயணித்தவேளை பூங்கனிச்சோலைக்கு அருகில் இரு மோட்டார்சைக்கிளிலும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

மூவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ள நிலையில் ஏனைய இருவரும் தொடர்ந்தும் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உரும்பிராய் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். கோப்பாய் தெற்கை சேர்ந்த துரைராசா மயூரன் (வயது 27) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் மோட்டார்சைக்கிளில் பயணித்தவேளை மோட்டார்சைக்கிளில் வேக கட்டுப்பாட்டை இழந்து வீதி அருகே இருந்த மின் கம்பத்துடன் மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இரு விபத்து சம்பவங்கள் தொடர்பிலும் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



தொழிற்சங்கங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டமொன்று நேற்று (18) கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக இடம் பெற்றது. (படப்பிடிப்பு – கிரிஷான் காரியவசம்)

## தடுப்பூசி வேலைத்திட்டம் மீண்டும் ஆரம்பம்

கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் கொவிட் தடுப்பூசி வேலைத்திட்டம் நேற்று (18) முதல் மீண்டும் செயற்படுத்தப்படும் என்று இலங்கை இராணுவம் அறிவித்துள்ளது.

திங்கட்கிழமை முதல் சனிக்கிழமை வரையான ஆறு நாட்களிலும் காலை 8.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை கொவிட் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் நிலந்த பிரேமரத்ன தெரிவித்தார்.

20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், 4ஆவது கொவிட் தடுப்பூசியைப் பெற விரும்புபவர்களுக்கும் இங்கு கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழன்
THAMILAN தமிலன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, மே 19ஆம் திகதி, வியாழக்கிழமை

# ரணிலுக்கு ஒத்துழையுங்கள்!

எரிபொருள் பிரச்சினையை மட்டுமல்ல, நாட்டில் பொருளாதாரப் பிரச்சினையை தீர்க்கவேண்டியிருப்பதாக நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார் பிரதமர் ரணில் விக்ரமசிங்க.

உலக வங்கி இப்போதைக்கு 160 மில்லியன் டொலரை வழங்கியுள்ளதாகவும், அவற்றில் எரிபொருள் கொள்வனவு செய்யமுடியாதென்பதால் இலங்கையில் தற்போது தங்கியிருக்கும் உலக வங்கியின் உயர்மட்டத் தலைவர்களுடன் அதுபற்றிப் பேசவுள்ளதாகவும் பிரதமர் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமையில் பிரதமர் எடுத்துவரும் நடவடிக்கைகளும் , விடுத்துவரும் அறிவிப்புகளும் மக்களுக்கு நம்பிக்கையை தந்துகொண்டிருக்கின்றன. புதிய பிரதமராகப் பதவியேற்ற பின்னர் நேற்று முன்தினம் முதல் தடவையாக நாடாளுமன்றத்தைச் சந்தித்தார் ரணில் விக்ரமசிங்க.

அவரது அரசு கவிழும் ஆபத்து ஏதும் அவருக்கு இல்லை. அவரது அரசை உடனடியாகக் கவிழ்க்கும் யோசனைகளோ, திட்டங்களோ எந்தத் தரப்புக்கும் இல்லை.

ஆகவே, தமது அரசைக் காப்பாற்றும் சிந்தனைகள், கவலைகள் ஏதுமின்றியே சுதந்திரமாக, சுயாதீனமாக செயலாற்றும் சூழல் பிரதமர் ரணிலுக்குக் கிடைத்திருக்கின்றது. பொருளாதார நெருக்கடிகளைக் கையாள்வதற்கான தனது திட்டங்களை அரசியல் கட்டுப்படுத்தல்களோ, மட்டுப்படுத்தல்களோ, அரசியல் சிக்கல்களோ இன்றி முன்னெடுக்கக் கூடிய ஒரு களச்சூழல் அவருக்கு வாய்த்திருக்கின்றது.

தனி ஓர் எம்.பியைக் கொண்ட ஒரு தரப்பாக அவர் களத்தில் இறங்கியிருக்கின்றமைதான் அவருக்கு இந்த அரிய வாய்ப்பை - சந்தர்ப்பத்தை - சூழ்நிலையை - தந்திருக்கின்றது எனலாம்.

இதையே 25க்குக் குறையாத எம்.பிக்களைக் கொண்ட ஓர் அணியின் அல்லது ஒரு கட்சியின் தலைவராக இந்தப் பிரதமர் பதவியை அவர் ஏற்றிருப்பாராயின் அவரின் கதை கந்தலாகியிருக்கும். பல்வேறு கட்சிகளினதும், அணிகளினதும் கால்வாரல்கள், இழுத்து வீழ்த்தல்கள் என்று பல நெருக்கடிகளை அவர் சந்திக்க வேண்டியிருந்திருக்கும்.

நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் அடுத்த ஓரிரு மாதங்கள் இன்னும் மோசமான கஷ்டங்கள் இருக்கும் என்று அவர் சுட்டிக் காட்டியிருக்கின்றார். கஜானாவைக் காலியாக்கி விட்டுச் சென்றிருக்கின்றார்கள், நிலைமையை சுமுகமாக்கி, வழமை நிலைக்குத் திருப்புவதற்கு தனக்கு இன்னும் ஓரிரு மாதங்கள் தேவை என்று பிரதமர் கோரியிருக்கின்றார்.

நியாயமான - புரிந்து கொள்ளக் கூடிய - வேண்டுகோள்தான்.

எனினும், இவ்வளவு தூரம் கஜானாவைக் காலியாக்கி, பொருளாதாரத்தைச் சீரழித்தமை இயல்பாக நடந்த விடயம் அல்ல என்கிறார் ரணில் விக்ரமசிங்க. இது குறித்து நாடாளுமன்றத் தெரிவுக்குழு நடத்தி, விரிவான விசாரணைகள் நடத்தி, உண்மையைக் கண்டறிய வேண்டும், வெளிப்படுத்த வேண்டும் என்பது அவரது திட்டமாக இருக்கின்றது என்பதும் தெரியவருகின்றது.

அதனை, தனியொரு சிப்பாயாக - One Man Armyயாக - களத்தில் இறங்கியிருக்கும் அவரால் ஒப்பேற்ற முடியுமா என்பதே கேள்வி. தற்போதைய அரசியல் கட்டமைப்பு அத்தகைய உண்மைகளைத் தேடிக் கண்டறிய அவரை அனுமதிக்குமா என்பதே வினா.

இப்போதைய அரசை ரணில் கொண்டு செல்வதில் அவருக்கு வேறு அரசியல் சுமைகள், கஷ்டங்கள், இக்கட்டுகள், இழுபறிகள் இல்லை. மடியில் கனமில்லை. அதனால் வழியில் பயமுமில்லை.

யார் சேர்ந்து வந்தாலும் வாருங்கள், வராவிட்டாலும் விடுங்கள், இந்த நெருக்கடி நிலையில் நான் என் பாட்டில் அரசைக் கொண்டு போவேன், யாரும் அதை விழுத்துவார்கள் என்றோ, அதைத் தடுப்பார்கள் என்றோ நான் கவலைப்பட மாட்டேன் என்பதே பிரதமர் ரணிலின் நிலைப்பாடு.

இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் கூறியபடி "ரணில் தோற்றால், நாடு தோற்றதாகி விடும்" என்ற கருத்து நிலைதான் ரணிலுக்கு இன்றுள்ள வாய்ப்பான - சாதகமான - நிலைமை.

ஆனால், பிரதி சபாநாயகர் தெரிவில் மீண்டும் ராஜபக்ஷக்களின் கை ஓங்கி இருப்பதாக யூகிக்க முடிகிறது.

அவ்வாறு ராஜபக்ஷக்களின் கை ஓங்குமாயின், இப்போதைய நெருக்கடி நிலைமையை சீராக்கும் ரணிலின் முயற்சிகளுக்கு இடையூறுகளை பொதுஜன பெரமுன தரப்பு விடுக்குமாயின், அது எதிர்காலத்தில் பெரும் விளைவுகளை ஏற்படுத்தும். நாட்டின் நெருக்கடி நிலைமையை சரி செய்ய நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை கொண்ட அரசியல் கட்சிக்கும் இயலவில்லை. இடைக்கால அரசை ஏற்க பிரதான எதிர்க்கட்சிக்கும் வக்கில்லை. அப்படியென்றால், எதையாவது செய்வோம் என்று துணிந்த ரணிலுக்கு இடமளிப்பதா? அல்லது அவரின் காலைப் பிடித்து இழுப்பதா? இன்று சமையல் எரிவாயுவுக்கும், எரிபொருளுக்கும், மருந்துக்கும் வரிசைகளில் நிற்கும் மக்கள் எல்லாவற்றையும் அமைதியாக பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே சட்டத்தைக் கையில் எடுத்த மக்களுக்கு மீண்டும் ஒரு நாளை அதற்காக ஏற்படுத்திக் கொடுக்கும் நிலைமையை அரசியல்வாதிகள் உருவாக்கிவிடக் கூடாது. அரசியல் காரணங்களை ஒருபுறம் தள்ளிவையுங்கள். இப்போதைக்கு ரணிலை செய்யவிடுங்கள். ஒத்துழையுங்கள்.!

# தீப்பற்றி எரியும் தென்னிலங்கை...!

## முனைவர் வைகைச்செல்வன்

இலங்கையில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடியால் அங்கு அமைதியற்ற சூழல் தொடர்கிறது. பிரதமர் பதவியிலிருந்த மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகிவிட்டார்.

தொடர் வன்முறை, ஊரடங்கு உத்தரவு, இராணுவக் கட்டுப்பாடு, மஹிந்தவின் வீடு தீக்கிரையாக்கப்பட்டது என்று நாடு முழுவதும் பதற்றம் தொடர்ந்து கொண்டு இருக்கிறது. இலங்கையில் ஏற்பட்ட கடும் பொருளாதார நெருக்கடியாலும், அசாதாரணமான சூழ்நிலையாலும் பல வாரங்களாகவே இலங்கை அரசுக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் இறங்கினர். நாளுக்கு நாள் போராட்டம் தீவிரமடைந்து வந்தது.

போராட்டம் நடத்தி வந்த மக்கள் மீது மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியதால் போராட்டக்களம் அதிவேகத்தைத் தொட்டது. பிரதமர் பதவியிலிருந்து விலகியதை அடுத்து, பிரதமர் மாளிகையில் இருந்து வெளியேறிய மஹிந்த ராஜபக்ஷ வெளிநாட்டுக்குச் செல்லத் திட்டமிட்டிருப்பதாக முதலில் தகவல்கள் வெளியான நிலையில், திருகோணமலை கடற்படைத் தளத்தில் தங்க வைக்கப்பட்டிருப்பதாக தகவல் வெளியானது. மஹிந்த ராஜபக்ஷ எங்கு சென்றாலும், அவருக்கு எதிராக போராட்டம் நடத்தியும், முற்றுகையிட்டும் மக்கள் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்து வருகிறார்கள்.

மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியதையடுத்து இலங்கையின் புதிய பிரதமராக ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார். ரணில் விக்ரமசிங்க ஏற்கனவே ஐந்து முறை இலங்கைப் பிரதமராக பதவி வகித்தவர். முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் புதிய பிரதமரான ரணில் விக்ரமசிங்கவுக்கு ட்விட்டரில் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். பிரதமர் ரணில் விக்ரமசிங்க தனது அமைச்சரவையில் முதல் கட்டமாக நான்கு பேரை அமைச்சர்களாக நியமித்துள்ளார்.

இலங்கையின் 26ஆவது பிரதமராக ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்திருந்தாலும், புதிய பிரதமர் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபித்தாக வேண்டும். ஆனால், நாடாளுமன்றத்தில் ரணில் மட்டுமே அவருடைய கட்சி சார்பில் நியமன எம்.பி.யாக உள்ளார். அவருடைய கட்சி சார்பில் வேறு எவரும் இல்லை. எனவே, அவர் அவர் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கவும், ஒருமித்த கருத்து மூலம் அரசியல் நிலைத்தன்மையை மீட்டெடுக்கவும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மக்களுக்கு உறுதியளித்தாலும், மக்கள் அவர் குரலை நிராகரித்து விட்டனர்.

"இலங்கையில் பொருளாதார நெருக்கடி காரணமாக நிலவி வரும் அசாதாரண சூழ்நிலை பற்றி எந்த விளக்கமும் எங்களுக்குத் தேவையில்லை. ராஜபக்ஷ குடும்பம் பதவி விலக வேண்டும்" என்று முழங்கி தொடர்ந்து ஒரு மாத காலமாகப் போராடி வந்த மக்களை மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் சரமாரியாகத் தாக்கினார். இதனால் பிரச்சினை தீவிரமடைந்தது. ராஜபக்ஷவின் தூண்டுதலின் பேரிலேயே அவரது ஆதரவாளர்கள் இந்தத் தாக்குதலை நடத்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

போராட்டக் களத்தில் நின்ற மக்கள் தங்களின் மீதான தாக்குதலுக்கு பதிலடியாக ராஜபக்ஷவின் வீடு, அவருடைய ஆதரவாளர்களின் வீடுகள், அமைச்சர்களின் வீடுகளை தீக்கிரையாக்கினர். இதனால் ராஜபக்ஷ குடும்பத்தினர் கொழும்பு அரச மாளிகையை விட்டு, தமிழர்கள் அதிகம் வாழும் திருகோணமலை கடற்படைத் தளத்தில் தஞ்சமடைந்தனர்.

பொதுச் சொத்துகளை சேதப்படுத்தும் போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று இலங்கைப் பாதுகாப்பு அமைச்சகம் முப்படைகளுக்கு உத்தரவிட்டிருக்கிறது. ஆனால், இயல்பு நிலை திரும்புவதற்கான வாய்ப்புகள் குறைவுதான் என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.




ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர் இலங்கையின் அந்நிய செலவாணி கையிருப்பு தற்போது மிகவும் குறைந்து விட்டது. இதற்கு முழுப்பொறுப்பும் கோட்டாபய ராஜபக்ஷவின் தவறான நிர்வாகம்தான் என்று மக்கள் குற்றம் சாட்டுகிறார்கள்.

தேர்தலில் போட்டியிடாதவர்களை அமைச்சர்களாகவும், இராணுவ அதிகாரிகளை ஆளுநர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், அமைச்சர்களின் செயலாளர்கள், மாவட்ட ஆட்சியர்கள் போன்ற அரசின் நிர்வாகம் சார்ந்த பதவிகளில் பணியமர்த்தியதும்தான் இந்த நிலைமைக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

இவற்றை பொதுமக்களும், பிற அரசியல் கட்சிகளும் சுட்டிக்காட்டியபோது அதனைத் திருத்திக் கொள்ள கோட்டாபய அரசு முன்வரவில்லை. உண்மையில், அதிபரும், பிரதமரும் இவற்றுக்கெல்லாம் பொறுப்பேற்று தாமாக முன்வந்து பதவி விலகியிருக்க வேண்டும். ஆனால், இப்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மட்டும்தான் பதவி விலகியிருக்கிறார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகவில்லை. அவரும் பதவி விலக வேண்டும். அப்போதுதான் மக்களின் கோபம் தணியும். கோட்டாபய ராஜபக்ஷ பதவியில் தொடர்ந்தால் இலங்கையின் நிலைமை இன்னும் மோசமான நிலைமையை நோக்கிச் செல்லும். ஒருவேளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினால், இடைக்காலஜனாதிபதி நியமிக்கப்பட வேண்டும் என்று போராட்டக் குழுவினர் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதன் பிறகு, புதிதாக ஆட்சிக்கு வருபவர்கள் ஜனநாயக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும், இயல்பு நிலைக்கு அரசையும், நாட்டையும் கொண்டு வர வேண்டும் என்றும் இலங்கை மக்கள் கருதுகிறார்கள். அத்தகைய இயல்பு நிலை உடனே வருவது சாத்தியமல்ல. ஓரிரு ஆண்டுகளாவது பிடிக்கும்.

ஏற்கனவே, இலங்கை பொருளாதார நெருக்கடியை சந்தித்துக் கொண்டிருந்தது. இப்போது அரசியல் நெருக்கடியும் சேர்ந்து விட்டது. அதன் காரணமாக, அரசியலமைப்புச் சட்டத்தின் நெருக்கடியும் கூடுதலாக வந்து விட்டது. அரசியலமைப்பு சட்டத்தின் நெருக்கடியைத் தீர்ப்பது என்பது கடினம். சட்டத்தின்படி ஜனாதிபதிக்கே அதிக அதிகாரம் இருக்கிறது. அவரைப் பதவியிலிருந்து அகற்றுவது என்பது கடினம். அப்படி சட்ட ரீதியாக ஒரு தேர்தலை சந்திக்க வேண்டும் என்று ஆசைப்பட்டால், அதற்குப் பல மாதங்கள் காத்திருக்க வேண்டும். ஆனால், அதுவரை மக்கள் நிச்சயமாக சகித்துக்கொண்டு இருக்க மாட்டார்கள். பொருளாதார நெருக்கடியும் மக்களைக் கழுத்தைப் பிடித்து நெருக்குகிறது.

ஆகவே, சட்டத்திற்கு வெளியே சென்று துணிச்சலான இடைக்கால ஏற்பாட்டை செய்தாக வேண்டும் என்றும், அதற்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் போராட்டக்காரர்கள் புதிய சிந்தனையை முன்வைக்கிறார்கள்.

அரசாங்கத்தோடு இணைந்து ஒரு இடைக்கால ஏற்பாட்டுக்குப் போக யாரும் முன்வரவல்லை.

ஏனென்றால், மத்தியில் வலுவான தலைமை இல்லை. இரண்டாவது காரணம், இந்த அரசாங்கத்தின் தோல்வியை தாங்கள் ஏற்றுக் கொள்வதற்கும் தயாராக இல்லை. ஆகவே, ஒரு இடைக்கால ஏற்பாடு உருவாகாதவரை அரசியலில் நிலைத்த தன்மை என்பதை நினைத்துக்கூட பார்க்க முடியாது.

அப்படி அரசியலில் நிலைத்த தன்மை ஏற்படாமல், உலக வங்கி, ஐ.எம்.எப். போன்ற வெளிநிறுவனங்கள் உதவிக்கு முன்வராது. இந்தியா போன்ற நாடுகளின் உதவி என்பது இடைக்கால உதவிதான். அவை மின்சாரவெட்டைக் குறைக்கலாம், விலைவாசி உயர்வைத் தடுக்கலாம். ஆனால், நிரந்தரத் தீர்வுக்கு உதவாது.

இலங்கை அரசியலமைப்பில் சர்வ அதிகாரம் கொண்டிருக்கக் கூடிய ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என எல்லோரும் கேட்டுக் கொண்டாலும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாற்காலியை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டிருக்கிறார். அதிகாரபோதை ராஜபக்ஷ குடும்பத்தினரிடம் மண்டிக் கிடக்கிறது. ஏற்கனவே, ஈழத் தமிழர்களுக்கு இழைத்த அநீதி ஆற்றொணாத் துயராக இருந்து வரும் நிலையில், இப்போது இலங்கைத் தீவு பற்றி எரிந்து கொண்டிருக்கிறது.

பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கவில்லையென்றாலும், குறைந்தபட்ச அடிப்படை உணவுத் தேவையைக் கூட நிறைவேற்றத் தவறிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும், அவரது குடும்பத்தாரையும் மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள். இலங்கையில் நிரம்ப இருக்கும் இரத்தின வளங்கள், மீன் வளங்கள், தேயிலை போன்றவற்றை உள்நாட்டுத் தேவை போக வெளிநாடுகளில் ஈர்ப்பதற்கு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல், தங்கள் சுயலாபத்திற்காக மட்டுமே அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டவர்கள் இவர்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களுக்கு பல கோடி ரூபா நிதி ஒதுக்கி ஆடம்பர சொகுசு வாகனங்கள், சொத்துகள், சலுகைகள் வழங்கியது அதிகார துஷ்பிரயோகமாகப் பார்க்கப்படுகிறது. தமிழீழ விடுதலைப்புலிகள் வீழ்த்தப்பட்ட 2009ஆம் ஆண்டு மே மாதம் அரசியல் செல்வாக்கின் உச்சத்தைத் தொட்ட மஹிந்த ராஜபக்ஷ மக்கள் போராட்டம் தீவிரமடைந்து 2022 மே மாதம் பெரும் சரிவைச் சந்தித்திருக்கிறார். மஹிந்த ராஜபக்ஷவின் வாழ்வில் மறக்கமுடி யாத இரண்டு காலகட்டங்கள் என்று சொன்னால் இரண்டு மே மாதங்கள் என்று குறிப்பிட வேண்டும். பிரதமரின் அலுவலக இல்லமான அலரி மாளிகையிலிருந்து அலறி அடித்துக் கொண்டு மஹிந்த ராஜபக்ஷ வெளியேறியிருக்கிறார்.

தங்களின் இளமைக்காலத்தைக் கழித்த பூர்வீக வீடு தீக்கிரையாக்கப்பட்டது சோகத்தின் உச்சம்.

இலங்கையின் தெற்கு மாகாணத்தில் உள்ள அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள ராஜபக்ஷ குடும்பத்தினரின் பூர்விக வீட்டில் பற்றவைக்கப்பட்ட தீ இலங்கை முழுவதும் பரவிப் பற்றி எரிகிறது. இரண்டு மே மாதங்களையும் அவர் மறக்கமாட்டார்.

## இன்றைய நாளில்...

- 1743 – சான்-பியேர் கிறிஸ்தீன் செல்சியஸ் வெப்பநிலை அலகைக் கண்டுபிடித்தார்.
- 1780 – நியூ இங்கிலாந்து மற்றும் கனடாவின் சில பகுதிகளில் அசாதாரணமான இருட்டு பகல் நேரத்தில் அவதானிக்கப்பட்டது.
- 1802 – பிரான்ஸின் முதலாம் நெப்போலியன் செவாலியே விருதை அறிமுகப்படுத்தினார்.
- 1834 – இலங்கையில் பாடசாலைகள் ஆணைக்குழு அமைக்கப்பட்டது.
- 1961 – சோவியத்தின் வெனேரா-1 வெள்ளிக் கிரகத்தைக் கடந்தது. பூமியை விட வேறொரு கோளைக் கடந்த முதலாவது விண்ணூர்தி இதுவாகும்.
- 1971 – சோவியத் ஒன்றியம் மார்ஸ்-2 விண்கலத்தை ஏவியது.
- 1978 – விடுதலைப் புலிகள் மீதான தடை ஜே.ஆர்.ஜயவர்த்தன அரசினால் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது.



# எரிபொருளின்றி மீன்பிடித்துறை நெருக்கடிக்குள்

## 5ஆயிரம் நீண்டநாள் படகுகள் துறைமுகத்தில் நிர்க்கதியாக தரித்திருக்கும் நிலைமை
## 19 ஆயிரம் லீற்றர் டீசலே விநியோகிக்கப்படுவதாக உரிமையாளர்கள் கவலை

(ஜூட் சமந்த)

மீன்பிடி நடவடிக்கைகளுக்காக கடலுக்கு செல்ல முடியாமல் 5ஆயிரம் வரையான நீண்டநாள் படகுகள் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை நீண்டநாள் படகு உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் ரூவன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.



நீண்டநாள் மீன்பிடிப் படகுகள் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக சர்வதேச கடற்பரப்புக்குச் சென்று மீண்டும் வர 45 நாட்கள் கடக்கின்றன. அதற்கமைய, ஒரு பயணத்துக்காக 11 ஆயிரம் லீற்றர் டீசல் பயன்படுத்தப்படுவதாக நீண்டநாள் படகு உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

நாளொன்றுக்கு ஒரு முறை 33 ஆயிரம் லீற்றருக்கும் அதிகளவான டீசல் கடந்த காலங்களில் விநியோகிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், நேற்று முன்தினம் (17) திக்கொவிட்ட துறைமுகத்துக்கு 19 ஆயிரம் லீற்றர் எரிபொருள் மாத்திமே விநியோகிக்கப்பட்டுள்ளது.

இந்த எரிபொருள் அளவு இரண்டு படகுகளுக்கு கூட போதாது என அந்தச் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

45 வரையாக நாட்களின் பின்னர் மீனவர்கள் துறைமுகத்திலே தரித்து வைக்கப்பட்டுள்ள நீண்டநாள் மீன்பிடிப் படகுகள், மீண்டும் 14 நாட்களில் வெளியேறுவது இயல்பான செயற்பாடாகும். இருந்தபோதிலும், தற்போதுள்ள நிலைமையில் இரண்டு மாதங்களுக்கு மேலாக தமது படகுகளை துறைமுகங்களில் தரித்து வைக்க வேண்டி ஏற்படுமென நீண்டநாள் மீன்பிடிப் படகு உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

துறைமுகத்தில் தரித்து வைக்கப்படும் ஒவ்வொரு நாளுக்காகவும் கட்டணம், படகு செலுத்துனர்களுக்கு கொடுப்பனவுகளை செலுத்தவும், வருமானமின்றி தரித்து வைக்கப்பட்டுள்ள படகுகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகையை முறையாக செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிப்பின் காரணமாக கடும் அசௌகரியத்துக்குள்ளாகி, ஒரு பயணத்துக்கு 11 இலட்சம் ரூபா மேலதிக செலவு ஏற்படுவதாகவும், இதேவேளை போதியளவு எரிபொருள் இன்மையினால் தாம் பெறும் நெருக்கடிக்கு சந்தித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எது எவ்வாறாயினும், தமது படகுகளினூடாக கொண்டுவரப்படும் மீன்கள் சர்வதேச சந்தைகளுக்கே விற்பனை செய்யப்படுவதாகவும், அதனூடாக நாட்டுக்கு பெருமளவு அந்நிய செலாவணி கிடைக்குமெனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# 13 ஆவது தேசிய போர்வீரர் தினம்

தனிநாடு கோரி கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களாக போராடி வந்த தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இலங்கை வெற்றி பெற்றதையடுத்து, மூன்று தசாப்த கால மோதலின் முடிவை ஒட்டுமொத்த தேசமும் மே 18, 2009 அன்று கொண்டாடியது.



நாட்டின் இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் சுதந்திரத்திற்காக தமது பொன்னான உயிர்களை தியாகம் செய்த இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் தேசபக்தியுள்ள போர்வீரர்களின் நேசத்துக்குரிய நினைவுகளை மரியாதையுடன் நினைவுகூரும் தினமே தேசிய போர்வீரர் தினமாகும்.

2009 மே மாதத்திற்கு முன்னர் இராணுவத்தின் வீரமிக்க போர்வீரர்கள் (23,962), கடற்படை (1160), விமானப்படை (443), 2 ஆயிரத்து 598 பொலிஸார் மற்றும் 456 சிவில் பாதுகாப்புத் திணைக்களப் பணியாளர்கள் என மொத்தம் 28 ஆயிரத்து 619 பேர் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் உயிர்த்தியாகம் செய்துள்ளனர். அவர்களின் வீரம், விலைமதிப்பற்ற தியாகம் மற்றும் தன்னலமற்ற அர்ப்பணிப்புக்காக அன்றைய தினம் ஒவ்வொரு ஆண்டும் மரியாதையுடன் நினைவுகூரப்படுகிறது.



தமிழீழ விடுதலைப் புலிகளின் தோல்விக்கு வழி வகுத்தது இலங்கை ஆயுதப் படைகள் என்பது மறுக்க முடியாத உண்மை. படையினரின் அர்ப்பணிப்பு காரணமாக, இலங்கை பிரஜைகளாகிய சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பரங்கியர்கள் மற்றும் ஏனைய அனைவரும் இப்போது நிம்மதியான வாழ்க்கையை அனுபவித்து வருகின்றனர்.

மேலும், வடமாகாணத்தில் உள்ள பல பெற்றோர்கள் விடுதலைப் புலிகளால் பலவந்தமாக கட்டாயப்படுத்தப்பட்ட வயதுக்குட்பட்ட பிள்ளைகள் உட்பட தமது பிள்ளைகளை பற்றி பயப்பட வேண்டியதில்லை என்பதையும் மறந்துவிட முடியாது. இவ்வாறானதொரு சூழலில் வெற்றி தினம் புரிந்து கொள்ளப்பட வேண்டியதுடன் பாராட்டப்பட வேண்டியதும், கொண்டாடப்பட வேண்டியதுமாகும். இது நாட்டிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய சமூகங்களுக்கு கிடைத்த பாரிய வெற்றியாகும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இவ்வாறு நாட்டின் இறையாண்மைக்காக மனிதாபிமானமான இறுதி யுத்தத்தில் சிறப்பாக செயல்பட்ட படைப்பிரிவுகளில் 58ஆவது படைப்பிரிவு மிகமுக்கியமாக திகழ்வதுடன் அன்று அப்படைப்பிரிவின் தளபதியான தற்போதைய பாதுகாப்பு பதவிநிலை பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தனது படையினரை சிறப்பாக வழிநடத்தி பிரிவினைவாத செயல்பாடுகளில் இருந்து நாட்டினை விடுவிப்பதில் மிகமுக்கிய பங்கினை வகித்தார்.

பயங்கரவாதிகளின் கொடூரமான பிடியில் இருந்து ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களை விடுவிப்பதன் மூலம் புதுமாத்தளனில் மிகப்பெரிய பணயக்கைதிகள் மீட்புப் பணியையும் அவரது பிரிவு நடத்தியது.

இவ்வாறு இனம், மதம், அரசியல் பேதமின்றி நாட்டின் இறையாண்மை, பிரதேச ஒருமைப்பாடு மற்றும் சுதந்திரத்திற்காக தியாகம் செய்தவர்களை இலங்கையர்கள் இந்த வெற்றி தினத்தன்று பெருமிதத்துடன் கௌரவிக்கின்றனர்.

# சுதந்திர நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்த வீரர்களுக்கு
## கௌரவமான மரியாதையை செலுத்துகிறேன்

### ஜனாதிபதியின் தேசிய படைவீரர் தினச் செய்தி

தேசிய படைவீரர் தினத்தை முன்னிட்டு, சுதந்திர நாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்த மற்றும் அங்கவீனமடைந்த வீர வீராங்கனைகளுக்கு தனது கௌரவமான மரியாதையை செலுத்துவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



தேசிய படைவீரர் தினத்துக்கான செய்தியிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

தாய் நாட்டின் சுதந்திரத்தையும், நாட்டின் ஒருமைப்பாட்டையும் பாதுகாத்த, வீரமிக்க படைவீரர்களை நாம் என்றும் மறக்க மாட்டோம். அவர்களின் தியாகத்தின் உயிர்ச்சக்தியை நாங்கள் எப்போதும் மதிக்கிறோம் என்பதே அதற்குக் காரணம். எனவே, இந்த ஆண்டும் தேசிய நோக்கத்திற்காக படைவீரர்கள் ஆற்றிய மகத்தான தியாகங்களை நினைவுகூர்ந்து தேசிய படைவீரர் தினத்தைக் கொண்டாடுகிறோம்.


இன்று நாம் எதிர்நோக்கும் நெருக்கடியான நிலை நம்மில் எவரும் எதிர்பார்த்தது அல்ல. பொருளாதார நெருக்கடியானது, அரசியல் மற்றும் சமூக சிக்கலான நிலை வரை வியாபித்தது. எவ்வாறாயினும், இந்த நாட்டின் இறையாண்மை மற்றும் சுதந்திரத்துக்கான கொள்கையை நாங்கள் குறைத்து மதிப்பிட மாட்டோம். ஏனென்றால் எல்லாவற்றிற்கும் மேலாக தாய் நாட்டைக் காக்க வேண்டும் என்ற அபிலாஷை இருப்பதனால் ஆகும். மனிதாபிமான நடவடிக்கைகளின் மூலம் யுத்தத்தின் சாபத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, நாட்டில் அமைதியை ஏற்படுத்தியவர்கள் எமது வீர வீராங்கனைகள். வெறுப்பும், கோபமும், பழிவாங்கலும் அதில் இருக்கவில்லை. எனவே, அமைதியான தாய் நாட்டில் இனவாதத்திற்கோ வேறு எந்த தீவிரவாதத்திற்கோ இடமில்லை. இலங்கை சமூகத்தில் ஒரு தனித்துவமான பெறுமதியாக நாங்கள் இதனைக் கருதுகிறோம்.

வரலாற்றில் பல சவாலான காலகட்டங்களையும் சந்தர்ப்பங்களையும் நாம் கடந்து வந்திருக்கிறோம். அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசாபிமானிகள் எப்போதும் முன்னிலை வகித்தனர் என்பதை மறந்துவிடக் கூடாது. இந்த குழு நாட்டின் ஒட்டுமொத்த படை வீரரையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. எனவே, தற்போதைய சவாலை இன்னும் உன்னிப்பாகப் பார்க்கும் பொறுப்பை வரலாறு உங்களுக்கு வழங்கியுள்ளது என்பதை நினைவில் கொள்வது அவசியம்.

பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டு குழுக்களும் தனிநபர்களும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியை ஒரு காரணமாக பயன்படுத்தி, தேசிய பாதுகாப்பில் அழுத்தங்களைப் பிரயோகிக்க முயற்சிக்கின்றனர் என்பதில் சந்தேகமில்லை. நாம் அதனை ஒன்றுபட்டு முறியடிக்க வேண்டும். அப்போதுதான் துணிச்சலான போர் வீரனின் நாட்டிற்கான அர்ப்பணிப்பு பாதுகாக்கப்படும்.







கொழும்பின் பல பகுதிகளிலும் மக்கள் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக நேற்று (18) காத்திருந்தனர். (படப்பிடிப்பு – எஷான் தசநாயக்க)

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

### 18.05.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 135 1446 | 146 3600 |
| கனேடியன் டொலர் | 163 6036 | 174 7482 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 0 17 | 43 23 8 |
| யூரோ | 263 231 | 274 340 |
| ஜப்பான் யென் | 1 6238 | 1 7310 |
| சிங்கப்பூர் டொலர் | 144 0711 | 153 0 6 |
| ஸ்ரேலிங் பவுன் | 33 5836 | 345 112 |
| சுவிஸ் பிரான்ங் | 244 225 | 257 257 |
| ஐ.அ.டொலர் | 243 5573 | 253 5205 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 842 78 1 |
| குவைட் | குவைட் தினார் | 0,061 1510 |
| ஓமான் | ஓமான் றியால் | 823 1054 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 3732 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 84 7700 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 86 8048 |



# 13ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

## மன்னாரில் உணர்வெழுச்சியுடன் உறவுகளை இழந்தவர்களினால் அனுஷ்டிப்பு




**(மன்னார் நகர் நிருபர்)**

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் கடந்த 2009ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற இறுதி யுத்தத்தின்போது இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட பொது மக்களுக்கான பொது அஞ்சலி நிகழ்வானது முள்ளிவாய்க்கால் பகுதியில் உறவுகளை இழந்தவர்களின் கண்ணீருடன் உலகம் முழுவதும் உள்ள தமிழர்களால் நினைவுகூரப்பட்டு வருகின்றது.

அதன் ஒரு பகுதியாக மன்னார் மாவட்டத்திலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில் அதன் மாவட்ட இணைப்பாளர் சகாயம் திலீபன் தலைமையில் நேற்று (18)காலை 11 மணியளவில் மன்னார் புதிய பஸ் நிலையத்தின் முன்பாக முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கான அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

முள்ளிவாய்க்கால் பகுதியில் இரண்டு உறவுகளை பறிகொடுத்த தாயினால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டதுடன், நிகழ்விற்கு வருகை தந்த அனைவரும் மலர் தூவி தங்களுடைய அக வணக்கத்தை தெரிவித்தார்கள்.

இதன்போது முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்காக எந்தவொரு நீதியான தீர்வும் சர்வதேசத்தாலோ இலங்கை அரசினாலோ இதுவரைகிடைக்கவில்லை என்ற பெற்றோரின் மனக்குமுறல்கள் மகஜராக வாசித்துக் காட்டப்பட்டன. அத்துடன் நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் முள்ளிவாய்க்கால் மனிதப் பேரவலத்தின் நினைவாக முள்ளிவாய்க்கால் கஞ்சிவழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் பணியாளர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் மனிதநேய செயற்பாட்டாளர் மதத்தலைவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## வவுனியாவில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை



**(வவுனியா நிருபர்)**

வவுனியாவில் முள்ளிவாய்க்காலில் மரணித்த மக்களின் நினைவாக ஆத்மசாந்திப் பிரார்த்தனை குருமன்காடு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் நேற்று (18) காலை இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் மற்றும் குருமன்காடு ஸ்ரீ விநாயகர் ஆலய பரிபாலன சபையினர் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது விசேட வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு உயிரிழந்த ஆத்மாக்களின் நினைவாக நெய் விளக்குகள் ஏற்றப்பட்டன.

குறித்த நிகழ்வில் உறவுகளை இழந்தவர்கள், அந்தணர் ஒன்றிய பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு தீபம் ஏற்றி ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்தித்தனர்.

## கிளிநொச்சியில் உணர்வுபூர்வமான நிகழ்வு




**(கிளிநொச்சி நிருபர்)**

கிளிநொச்சியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் 2022 நிகழ்வு சமத்துவக் கட்சி அலுவலகத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

மிகப்பெரும் மனிதப் பேரவலத்தை ஏற்படுத்திய இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்டஅனைத்து உறவுகளுக்கும் வருடந்தோறும் மே 18இல் இழந்த உறவுகள் உணர்வுபூர்வமாக நினைவேந்தப்படுகின்றார்கள். அந்த வகையில் சமத்துவக் கட்சியின் அலுவலகத்திலும் இவ்வருடமும் நினைவேந்தல் நிகழ்வானது முன்னாள் போராளி கண்ணன் தலைமையில் இடம்பெற்றது. கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் லோறன்ஸ் பொதுச் சுடரினை ஏற்றி வைக்க ஏனையவர்களும் சுடர்களை ஏற்றி நினைவு படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை கடைப்பிடித்தனர்.

## நந்திக்கடலில் மலர்தூவி அஞ்சலி செலுத்தினார் ரவிகரன்

**(முல்லைத்தீவு நிருபர்)**

முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு, முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று (18) நந்திக்கடலில் மலர்தூவி அஞ்சலி செலுத்தியுள்ளார்.

எங்கள் பெருமைமிகு வரலாறின் சோகமான இறுதிக் காட்சிகளின் மௌனமான சாட்சியே இந்த நந்திக்கடல். ஏராளமான எங்கள் உறவுகளின் கண்ணீரும், செந்நீரும் கலந்துள்ள இந்தக் கடலன்னையை வணங்கி, உயிர்நீத்த எங்கள் உறவுகளுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தியதாக அவர் தெரிவித்தார்.

மேலும், இந்த அஞ்சலி நிகழ்வுகளில் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரனும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## யாழ். முஸ்லிம் மக்களால் கஞ்சி வழங்கிவைப்பு



**(யாழ். நிருபர்)**

ஐக்கியத்திற்கான யாழ். முஸ்லிம் சமூகத்தினரின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தினை முன்னிட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (17) யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் இடம்பெற்றது.

முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வில் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் முஸ்லிம் மக்கள் கலந்துகொண்டு வீதியால் பயணித்தோருக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சியை வழங்கினார்கள்.

## மாவுசாக்கலை நீர்த்தேக்கத்தில் பூத்துக்குலுங்கும் வண்ணநிறப் பூக்கள்



**(க.கிஷாந்தன்)**

மஸ்கெலியா, மாவுசாக்கலை நீர்த்தேக்கத்தில் நீர்வற்றிப்போகும் காலப்பகுதியில், நீர்த்தேக்கத்தின் மத்தியில் வண்ணமயமான பூக்கள் பூத்துக் குலுங்குவது அழகிய காட்சியாக மாறியுள்ளது.

இந்த அழகான பூக்கள் ஊதா, வெள்ளை மற்றும் நீல நிறங்களை கொண்டவை. இந்த மலர்கள் கொத்து கொத்தாக பூத்துள்ளதோடு, இந்த பூக்களில் முட்கள் உள்ளதும் குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு முறையும் நீர்வற்றும்போதும் இந்த அழகான பூக்கள் பூத்துக் குலுங்குவதாக இதனை பார்வையிடுவதற்கு வருவோர் கூறுகின்றனர்.

## பெசில் அரசியலில் இருக்கும்வரை மாற்றத்தைக் கொண்டுவரமுடியாது

### நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஸ்ணன்

**(நுவரெலியா நிருபர்)**

கட்சிகளின் ஒற்றுமையை சீர்குலைத்து பிரதி சபாநாயகர் தெரிவில் கட்சிகள் ஒற்றுமையாக செயற்பட தீர்மானிக்கப்பட்டிருந்தபோதிலும் அதனை இல்லாமல் செய்தவர் பெசில் ராஜபக்ஷவே. இவரை இலங்கை அரசியலில் இருந்து அப்புறப்படுத்தாதவரை மாற்றத்தை கொண்டு வர முடியாது என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

பிரதி சபாநாயகர் தெரிவு தொடர்பாக நேற்று (18) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

பிரதி சபாநாயகரை தெரிவு செய்யும் விடயத்தில் பிரதமரின் கருத்தாக இருந்தது பெண் ஒருவரை தெரிவு செய்ய முடியுமாக இருந்தால் அது சிறப்பானது என. அதன்படி ஐக்கிய மக்கள் சக்தி அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடி பெண் ஒருவரை பெயரிட்டிருந்தது. அதற்கு அனைவரும் சம்மதித்திருந்த நிலையிலேயே தெரிவு நடைபெற்ற அன்று காலையில் பெசில் ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

இதன் காரணமாக நாடாளுமன்றத்தில் இரண்டு பெயர்கள் முன்மொழியப்பட்டன. எனவே இந்த சந்தர்ப்பத்தில் வாக்கெடுப்பு ஒன்றின் மூலமாக தெரிவு செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டதுடன் இரண்டு குழுக்களாக பிரிந்து செயற்பட வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது.



இதன் காரணமாக ஒற்றுமையாக செயற்படத் தீர்மானித்திருந்த விடயத்தை இல்லாமல் செய்து கட்சிகளை பிரித்தவர் பெசில் ராஜபக்ஷவே. இவருக்கு இது கைவந்த கலை. கடந்த காலங்களில் இவர் சிறுபான்மைக் கட்சிகளை பிரித்து துண்டாடினார். இன்றும் அதேவேளையை இவர் தொடர்ந்து செய்கின்றார்.

அதேநேரத்தில், நாடாளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க நினைப்பதுபோல நடக்க முடியாது என்பதை இந்தப் பிரதி சபாநாயகர் தெரிவின் மூலமாக பெசில் ராஜபக்ஷ பிரதமருக்கு உணர்த்தியுள்ளார்.

எனவே, இவ்வாறானவர்களுடன் பிரதமர் தொடர்ந்து எப்படி பயணிக்கப்போகின்றார், அவர் எதிர்பார்க்கின்ற மாற்றத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவார்? தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது அல்லது அனைத்து கட்சிகளும் இணைந்து செயற்படுவது என்பதெல்லாம் வெறும் பேச்சில் மாத்திரமே இருக்க முடியும். செயலில் காட்ட முடியாது.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க இந்த விடயம் தொடர்பாக உடனடியாக சரியான ஒரு முடிவை எடுக்க வேண்டும். யாருடன் தொடர்ந்து பயணிப்பது. அப்படியானால், உடனடியாக செய்ய வேண்டிய மாற்றங்கள் என்ன? என்பதை சிந்தித்து செயற்பட வேண்டும். இல்லாவிட்டால் அவர் எதிர்பார்க்கின்ற இலக்கை நோக்கி ஒரு நாளும் பயணிக்க முடியாது. பெசிலின் தலையீடு தொடருமாக இருந்தால் ஏனைய கட்சிகள் பிரதமருக்கு வழங்குவதற்கு தீர்மானித்திருக்கின்ற ஆதரவை தொடர முடியுமா? என்ற கேள்வியும் ஏற்படும். எனவே இது தொடர்பாக பிரதமர் உடனடியாக நடவடிக்கை எடுப்பாரா? என்ற கேள்வியே இப்பொழுது எங்களிடம் இருக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஹட்டனில் மரக்கறிகளின் விலை சடுதியாக உயர்வு

**(மனுர சுதத் செல்லஹேவா)**

ஹட்டன் மரக்கறி வியாபார நிலையங்களில் மரக்கறிகளின் விலைகள் சடுதியாக உயர்ந்துள்ளதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதனால் தம்மால் மரக்கறிகளை கொள்வனவு செய்து சாப்பிடமுடியாது தவிப்பதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்வடையும் வேகத்தில் தமது வருமானம் அவ்வாறு உயர்வடைவதில்லை. இவ்வாறு சென்றால் எவ்வாறு தாம் வாழ்க்கையை கொண்டு செல்வது எனவும் அவர்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

தற்போது ஹட்டனில் தக்காளி ஒரு கிலோ 800 முதல் 1000ரூபாவாகவும், கரட் கிலோ 380 முதல் 400 ரூபாவாகவும், அவரைக்காய் மற்றும் கத்தரிக்காய் ஆகியன கிலோ 400 முதல் 420 ரூபாவாகவும், லீக்ஸ் கிலோ 360 முதல் 380 ரூபாவாகவும், மிளகாய் கிலோ 360 முதல் 380 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது.

இந்நிலைமை தொடர்பில் கருத்து தெரிவித்த அப்பகுதி மரக்கறி வியாபாரி ஒருவர், மொத்த மரக்கறி கொள்வனவு விலை கடுமையாக உயர்வடைந்துள்ளமையினாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், எதிர்காலத்தில் மரக்கறிகளின் விலை மேலும் உயரும் அபாயம் உள்ளதாகவும் தெரிவித்தார்.



மத்திய மாகாண சபையின் அமைச்சுகள் இரண்டிற்கு புதிய செயலாளர்கள் இருவர் 16ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளனர். கண்டியிலுள்ள ஆளுநர் காரியாலயத்தில் வைத்து ஆளுநர் லலித் யூ. கமகேவினால் மேற்படி நியமனக்கடிதங்கள் கையளிக்கப்பட்டன. மத்திய மாகாண விவசாய அமைச்சின் புதிய செயலாளராக ஆர்.எம்.பி.எஸ்.பீ. ரத்நாயக்கவும் மாகாண சுகாதார அமைச்சின் புதிய செயலாளராக திருமதி எல்.ஏ.சுஜாதா விஜேசிங்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர். **(கண்டி நிருபர்)**




ஹட்டனில் எரிபொருள் நிலையம் ஒன்றில் நேற்று எரிவாயு பெற்றுக்கொள்வதற்காக வெற்று கேஸ் சிலிண்டர்களை உரிமையாளர்கள் அற்ற நிலையில், வரிசையாக ஒன்றோடொன்று இணைத்து வைத்திருப்பதை காணலாம். **(மனுர சுதத் செல்லஹேவா)**

## தொழிலாளர் தேசிய சங்கத்தின் கூட்டம்

தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணியின் தற்போதைய அரசியல் செயற்பாடுகள் குறித்து செயற்பாட்டாளர்களுக்கு விளக்கமளிக்கும் விசேட கூட்டமொன்று எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஹட்டனில் இடம்பெறவுள்ளதாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி நிதிச் செயலாளரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான சோ.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தலைமையில் ஹட்டன் டி.கே.டப்ளியூ கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ள இந்த விசேட கூட்டத்தில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தோட்டத் தலைவர்கள் உட்பட கட்சியின் உயர்பீட முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான பழனி திகாம்பரம், மயில்வாகனம் உதயகுமார் ஆகியோர் "நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலையில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் நிலைப்பாடு" தொடர்பில் உரையாற்றவுள்ளனர்.

# வெதுப்பக உரிமையாளர்கள் கடும் நெருக்கடியில்!

## நியாயமின்றி கோதுமை மா விலையை அதிகரிக்க வேண்டாம் என கோரிக்கை



கோதுமை மா விலை மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளதால் தமது தொழிற்துறையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை உருவாகியுள்ளதாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கோதுமை மா விலை நேற்று முன்தினம் (17) 35 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்தச் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் நேற்று (18) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். நேற்று (நேற்று முன்தினம்) முதல் கோதுமை மாவின் விலை 35 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இது நியாயமற்ற விடயமாகும். இதுதொடர்பில் தேடிப்பார்ப்பதற்கு யாரும் இல்லாத நிலை உருவாகியுள்ளது. நாட்டில் அரசாங்கமொன்று இல்லாத சூழ்நிலை தோற்றம் பெற்றுள்ளது. கம்பனிக்காரர்கள் தமது தேவைக்காக மக்களை சூறையாடும் நிலையாக மாறியுள்ளது.

ஆனால், மா நிறுவனங்களுக்கு பிரச்சினை இருக்கிறது என்பதை நாங்கள் மறுக்கவில்லை. இருந்தபோதிலும், தற்போதுள்ள நிலைமையில் நியாயமற்ற முறையில் விலை அதிகரிப்பை முன்னெடுக்க வேண்டாமென்றே நாங்கள் கோருகிறோம்.

நாட்டுக்கு தேவையான கோதுமை மாவில் 70 சதவீதத்தை விநியோகிப்பதுடன் மற்றைய நிறுவனம் 30 சதவீதத்தை மாத்திரமே விநியோகிக்கின்றது. ஆனால், 30 சதவீதம் விநியோகிக்கும் குறித்த நிறுவனம் ஒரு கிலோ கோதுமை மாவின் விலையை 35 ரூபாவால் அதிகரித்துள்ளது.

50 கிலோ கிராம் கொண்ட கோதுமை மா மூடையொன்றின் விலை 12 ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரித்துள்ளது.

அதாவது, 4000 ரூபாவுக்கும் குறைவாக இருந்த கோதுமை மா மூடையொன்றை, 12 ஆயிரத்து 500 ரூபாவுக்கு கொள்வனவு செய்ய வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இவ்வாறு தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியாது. டீசல் துளிக் கூட இல்லாத நிலை உருவாகியுள்ளது, பெற்றோல் துளிக் கூட இல்லை. மண்ணெண்ணெய்யும் இல்லை என அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

# ஜீனியஸ்பார்க் தனியார் கல்வி நிறுவனத்தின் மாணவர்களுக்கான வருடாந்த பரிசளிப்பு விழா



(பீ.எம். முக்தார்)

பாணந்துறை ஹேனமுல்லையில் அமைந்துள்ள ஜீனியஸ்பார்க் தனியார் கல்வி நிறுவனத்தின் மாணவர்களுக்கான வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் 'செரண்டிப் பென்குவட்' மண்டபத்தில் அதன் பணிப்பாளர் ஹிமாயா இப்றாஹிம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பேருவளை நகர சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் கோல்டன் கேட் சர்வதேச பாடசாலையின் பணிப்பாளருமான அல்ஹாஜ் ஹஸன் பாஸி, சிறப்பதிதிகளாக ஹொரேதுடுவை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் எஸ். எச். முத்தலிப், ஜீலான் மத்திய (தேசிய பாடசாலை) கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபரும் கணித ஆசிரியருமான எம். எச். எம். இல்யாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட ஹொரேதுடுவை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஜனாப் முத்தலிப், பிள்ளைகளுக்கு எதிர்மறையான எண்ணங்களை ஒரு போதும் விதைக்கக் கூடாது. நாம் பிள்ளைகளுக்கு நாளை வரும்போது புத்தகத்தை மறக்காமல் கொண்டு வாருங்கள் என்று கூறினால் அவர்கள் மறந்துவிட்டுத்தான் வருவார்கள். அதே அவர்களிடத்தில் நாளை ஞாபகத்துடன் கொண்டு வாருங்கள் என்று கூறினால் ஞாபகமாகக் கொண்டு வருவார்கள். அதேபோன்று குழந்தை கண்ணாடிக் குவளையொன்றை எடுத்துச் செல்லும்போது கவனமாக கொண்டு வாருங்கள் என்று கூறினால் கவனமாகக் கொண்டு வருவார்கள். அதை விடுத்து உடைத்து விடாமல் கொண்டு வாருங்கள் என்று கூறினால் தவறுதலாகவேனும் உடைத்து விடுவார்கள். ஆகவே பிள்ளைகளிடத்தில் பெரியவர்கள், பெற்றோர்கள் நாம் எப்போதும் நேர்மறையான எண்ணங்களை விதைக்க வேண்டும். அதேபோன்று பிள்ளைகளுக்கு சிறு வயதிலிருந்து ஒழுக்க விழுமியங்களையும் கற்றுக்கொடுக்க வேண்டும்.

அப்போதுதான் அவர்கள் சிறந்த தலைவர்களாக நாளை உருவாகுவார்கள். பாடசாலைகளைப் போன்று தனியார் கல்வி நிறுவனங்களும் மாணவர்களை ஊக்குவிப்பது வரவேற்கத்தக்க விடயமாகும் என்று குறிப்பிட்டார்.

# முன்னாள் கிழக்கு மாகாண சபை மருதானை ஸாவியாவில் 155 ஆவது ஷாதுலிய்யா மனாகிப் மஜ்லிஸின் ஆரம்ப நிகழ்வு ஞாயிறன்று

(பீ. எம்.முக்தார்)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற பேருவளை மருதானை ஸாவியாவில் 155 ஆவது வருட ஷாதுலிய்யா மனாகிப் மஜ்லிஸின் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (22) மாலை மஃரிப் தொழுகையின் பின் கலீபத்துஷ் ஷாதுலி மௌலவி எம். ஐ. எம். ரபீக் (பஹ்ஜி) தலைமையில் இடம்பெறவுள்ளது.

ஸாவியா நிர்வாக சபைத் தலைவர் அல்ஹாஜ் ஜாபிர் முஹம்மத் அப்ரார் பள்ளிவாசல் ஜமாஅத் சபைத் தலைவர் சட்டத்தரணி எம். ஏ. எம். ஹனபி ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் இடம்பெறும் இம் மஜ்லிஸின் ஆரம்ப தின நிகழ்வில் கலீபத்துஷ் ஷாதுலி மௌலவி அஸ்ஸெய்யித் அலவி மௌலானா (முர்ஸி) விசேட சொற்பொழிவாற்றுவார் என ஸாவியா நிர்வாகக்குழு உறுப்பினர் அல்ஹாஜ் பயாஸ் முஹம்மத் ஜே.பி. தெரிவித்தார். ஷாதுலிய்யாத் தரீக்காவின் ஸ்தாபகர் அல் குத்புல் அக்பர் இமாம் அபுல்ஹசன் அலியுஷ் ஷாதுலி (ரலி) அவர்களின் 850 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டும் ஷாதுலிய்யா மஷாயிகுமார்களின் ஞாபகார்த்தமாகவும் இம் மஜ்லிஸ் இடம்பெறுவதாகவும் ஸாவியா நிர்வாகக்குழு உறுப்பினர் பயாஸ் முஹம்மத் மேலும் தெரிவித்தார்.

22 ஆம் திகதி ஆரம்பமாகும் இம்மஜ்லிஸ் மே 30ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதுடன் 31 ஆம் திகதி மாலை தமாம் செய்யப்படும்.

மஜ்லிஸின் ஆரம்ப நிகழ்வில் கலீபாக்கள், உலமாக்கள், முகத்தமீன்கள், இஹ்வான்கள் பங்குபற்றுவர். தினமும் இடம்பெறும் மனாகிப் மஜ்லிஸில் ஆத்மீக ஞானி இமாம் அபுல் ஹஸன் அலியுஷ் ஷாதுலி (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாறு, ஆன்மீகப் பணிகள் பற்றிய விசேட மார்க்கச் சொற்பொழிவாற்றுவர்.

# கண்டி மாநகர சபை உறுப்பினர் சங்கீத்தின் வீட்டில் 34 பவுண் தங்க நகைகள் கொள்ளை

(கண்டி நிருபர்)

கண்டி மாநகர சபை பொதுஜன பெரமுன உறுப்பினர் சங்கீத் சில்வாவின் வீட்டுக்கு தீயிடப்பட்டதில் சுமார் 34 பவுண் எடை கொண்ட தங்க நகைகள் காணாமல் போயுள்ளதாக அவரின் மனைவி நேற்று (18) பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 09ஆம் திகதி கண்டியில் அமைக்கப்பட்டிருந்த 'கோட்டா கோ கம' கிளை தாக்கப்பட்டதையடுத்து, கண்டி போகம்பறை பிரதேசத்திலுள்ள கண்டி மாநகர சபை உறுப்பினர் சங்கீத் சில்வாவின் வீடும் தாக்கப்பட்டது. இச்சம்பவத்தையடுத்து, மேற்படி வீட்டிலிருந்த 34 பவுண் எடை கொண்ட தங்க நகைகள் மற்றும் 8 இலட்சம் ரூபா ரொக்கப் பணம் உட்பட இன்னும் பெறுமதியான பல பொருட்கள் காணாமல் போயுள்ளதாக அவரின் மனைவி கே.ஜீ ரேனுகா தர்மவங்ச என்பவரால் கண்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சந்தேகநபர் அல்லது சந்தேகநபர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மோட்டார் சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட நபரொருவர் கைது



வவுனியாவில் கடந்த மார்ச் மாதம் பஜார் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார்சைக்கிள் திருடிச்செல்லப்பட்டிருந்த நிலையில், அதுதொடர்பில் பொலிஸார் தொடர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

விசாரணைகளுக்கமைய மோட்டார் சைக்கிளுடன் சந்தேகநபர் ஒருவர் வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வவுனியாவில் கடந்த மார்ச் மாதம் பஜார் வீதியில் நிறுத்தி வைத்திருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளதாக வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

அந்த முறைப்பாட்டுக்கமைவாக வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜே.ஏ.எஸ். ஜெயக்கொடியின் வழிகாட்டலில், வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ் பரிசோதகர் கியான் தலைமையில் பொலிஸ் சார்ஜன்ட்களான திசாநாயக்க, டிலீபன், உபாலி மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள்களான, தயாளன், திசாநாயக்க ஆகியோர் அடங்கிய பொலிஸ் குழுவினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். குறித்த மோட்டார் சைக்கிள் நொச்சியாகம பகுதியில் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் குற்றத்தடுப்புப்பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளதுடன், நொச்சியாகம பகுதிகளைச் சேர்ந்த 39வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரை இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

# தொழில்நுட்பக் கல்லூரிகளில் NVQ நிலைகளை பூர்த்திசெய்த இளைஞர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கி வைப்பு





நாடு முழுவதிலும் உள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளில் NVQ நிலைகள் 05 மற்றும் 06 ஆகியவற்றை வெற்றிகரமாக பூர்த்திசெய்த இளைஞர்களுக்கான டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு, முன்னாள் திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொலவின் தலைமையில் கடந்த மார்ச் மாதம் 11ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தொலைத்தொடர்பு, தகவல் தொழில்நுட்பம், கடல் வள முகாமைத்துவம், மோட்டார் இயந்திரவியல், குளிர்சாதனப் பெட்டி மற்றும் குளிரூட்டி பழுதுபார்த்தல், மின்பொறியியல், சிவில் ஆகியவை உள்ளிட்ட 41 வெவ்வேறு துறைகளில் தொழிற்பயிற்சிகளை பூர்த்திசெய்தோருக்கு டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இலங்கையில் தொழில்நுட்பக் கல்லூரி கல்வியானது, மருதானை தொழில்நுட்பக் கல்லூரியினால் ஆரம்பிக்கப்பட்டு 30 தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் 09 தொழில்நுட்பவியல் கல்லூரிகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இலங்கை இளைஞர்கள் உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தைகளில் தேவைப்படும் தொழில்சார் திறன்களால் தங்களை வளப்படுத்திக்கொள்ள இந்த நிறுவனங்கள் சிறந்த வாய்ப்பளிக்கின்றன. தொழில்நுட்பக் கல்லூரிகள் ஆற்றிவரும் இந்த அளவிட முடியாத சேவை, மருதானை தொழில்நுட்பக் கல்லூரியினாலேயே ஆரம்பிக்கப்பட்டது.

மருதானை தொழில்நுட்பக் கல்லூரி என அறியப்படும் மேல் மாகாணத்தின் பிரதான தொழில்நுட்பக் கல்லூரியான இது, 1893 ஆம் ஆண்டு புகையிரதத் திணைக்களத்துக்குச் சொந்தமான கோப்பி சேமிப்பு நிலையத்தில் அதன் முதல் பணியை தொடங்கியது. ஆரம்பத்தில் சிலோன் தொழில்நுட்ப பாடசாலை என்று அழைக்கப்பட்டதுடன் அங்கு 25 மாணவர்கள் மாத்திரமே கல்வி பயின்றனர். அப்போது பொதுவான தொடக்கம் இருந்தபோதிலும் நிறுவனம் மிக வேகமாக செயற்பாடுகளைத் தொடங்கி தனக்கான இடத்தையும் புகழையும் ஏற்படுத்திக் கொண்டதுடன், நாட்டில் விரும்பப்படும் தொழில்நுட்ப, தொழில்கல்விக்கான நிறுவனமாக மாறியது.

முதலில் இந்நிறுவனம் பெருந்தோட்டத் தொழிற்றுறை மற்றும் நாட்டின் வேறு சில தொழிற்றுறைகளுக்கான பணியாளர்களை உருவாக்கியது. அதாவது, கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் கலைபாட விதானங்களுடன் தொடர்புடைய பயிற்சிகளை வழங்கியது. நாட்டில் பல்கலைக்கழக முறைமை நன்கு ஸ்தாபிக்கப்படும் வரை, மருதானை தொழில்நுட்பக் கல்லூரியானது உயர் கல்வி மற்றும் தொழில் பயிற்சிகளை வழங்கும் ஒரேயொரு முன்னணி நிறுவனமாக விளங்கியது.

இன்று, மருதானை தொழில் நுட்பக் கல்லூரி, நாடு முழுவதும் உள்ள ஏனைய தொழில்நுட்பக் கல்லூரிகளுடன் இணைந்து இலங்கையில் தொழில்சார் கல்வியில் முன்னோடியாக விளங்கி, தொழிலுக்குத் தயாராகும் வகையிலான இளைஞர்களுடன் திறமையான மற்றும் தகுதிவாய்ந்த தலைமுறைகளை உருவாக்குகிறது.

# மட்டுவில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு தடை!

## கோட்டா கோ கமவிலுள்ள அனுமதி ஏன் மட்டக்களப்பில் மறுக்கப்படுகிறதென சாணக்கியன் எம்.பி. சபையில் கேள்வி



மட்டக்களப்பில் முள்ளிவாய்க்கால் நிவைவேந்தலை நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

இந்த பிரச்சினைக்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்றில் நேற்று (18) உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கொழும்பு 'கோட்டா கோ கம' உள்ளிட்ட நாட்டின் பல இடங்களில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு தற்போது இடம்பெற்று வருகிறது. ஆனால், மட்டக்களப்பில் அதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவர்களின் உறவினர்கள் 600 பேர் இதனால் நினைவுகூரலில் ஈடுபடமுடியாது பாதிக்கப் பட்டுள்ளனர்.

குறித்த நிகழ்வை ஒரு அமைப்போ அல்லது கட்சியோ ஏற்பாடு செய்ததற்கான ஆதாரம் இல்லாத நிலையில், மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் மக்கள் நினைவுகூரல் நிகழ்வில் ஈடுபடுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கின்றனர்.

அத்தோடு, பதாதைகள், புகைப்படங்கள் உள்ளிட்டவற்றையும் அகற்றுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அமைதியான நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்க அனுமதி வழங்கப்படுமென பிரதமர் உறுதியளித்திருந்த நிலையில், இந்த விடயம் குறித்து உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் சபையில் குறிப்பிட்டார்.


சீட்டிழுக்கப்பட்ட திகதி 17.05.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத

சீட்டிழுப்பு இலக்கம்: 4758
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 10,430,710.00
அச்சிடப்பட்ட திகதி : 10.05.2022
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 6 8 7 9 6 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 23,617,146.00

தன நிதானய

டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022 /05 /10
சீட்டிழுப்பு இலக்கம் : 788
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,496,940.00
A 06 44 51 80
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 110,529,918.40

ராசீ சுப பலன் Handahana

சீட்டிழுப்பு இலக்கம்: 0067
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,650,580.00
லொத்தர் சீட்டு அச்சிடப்பட்ட திகதி 10.05.2022
இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 02 29 34 48
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,569,687.60

கோடி 25+ Mega POWER மெகா பவர்

சீட்டிழுப் இலக்கம் 1106
டிக்கட் அச்சிடப்பட்ட திகதி: 2022.04.03
ரூ. 5,161,660.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 251,369,378.00
Q 19 01 08 14 49
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board


# CBL குழுமமும் டயலொக், MAS & Hemas வழங்கும் அவசரகால நிவாரண முயற்சியான "மனிதநேய ஒன்றிணைவு" உடன் இணைகிறது

CBL குழுமத்தின் நாட்டில் பொருளாதார நெருக்கடியின் காரணமாக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கு அவசரகால நிவாரணம் வழங்கும் டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, MAS Holdings, Hemas Holdings PLC, சர்வோதய சிரமதான சங்கம் மற்றும் PwC Sri Lanka ஆகியன கூட்டாக மேற்கொண்டுள்ள "மனித நேய ஒன்றிணைவு" நிவாரணத் திட்டத்தில் தாமும் இணைந்து கொண்டுள்ளனர். பாதிப்பிற்குள்ளாகியுள்ள சமூகங்களுக்கு உடனடி உதவிகளை வழங்கும் நோக்கில், "மனிதநேய ஒன்றிணைவு" நிவாரணத் திட்டத்தை முன்னெடுப்பதற்காக அதன் நிறைவேற்று பங்காளரான சர்வோதய மற்றும் கணக்காய்வு பங்காளரான PwC Sri Lanka உள்ளிட்ட ஒத்த எண்ணம் கொண்ட பங்காளர்களுடன் டயலொக் கைகோர்த்தவாறு, டயலொக், MAS மற்றும் Hemas ஆகிய நிறுவனங்களின் நிதியுதவி பங்களிப்பில் வழங்குகின்ற மேற்படி "மனிதநேய ஒன்றிணைவு" நிவாரணத்தினூடே, 100,000 க்கும் மேற்பட்ட மோசமாக பாதிக்கப்பட்டுள்ள ஆழ்ந்த வறுமையில் உள்ள குடும்பங்களுக்கு அவசர நிவாரணங்களை வழங்குவதுடன், மேற்படி "மனிதநேய ஒன்றிணைவு" நிவாரணத் திட்டத்தின்மூலம் தற்போது 25 மாவட்டங்களில் அவசர நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. பயனுள்ள பொருளாதார முன்மாதிரி திட்டத்தினூடாக நிலையான நலன் பரிமாற்ற முறையொன்று நாட்டில் நிறுவப்படும்வரை மேற்படி "மனிதநேய ஒன்றிணைவு" நிவாரண வேலைத்திட்டமானது 60–90 நாட்களுக்கு தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. CBL குழும முகாமைத்துவப் பணிப்பாளர் ஷியாமலி விக்ரமசிங்க அவர்கள் தெரிவிக்கையில், CBL குழுமமானது அக்கறை, தரம், புத்தாக்கம் மற்றும் நேர்மை ஆகிய நான்கு முக்கிய மதிப்புகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்கை மதிப்பானது CBLஇல் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.

இந்த நிவாரண செயற்றிட்ட நடவடிக்கைகளில் பங்குதாரர்களாக இருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். மேலும், சரியான தருணத்தில் இந்த முயற்சியில் ஒரு பகுதியாக இருப்பதற்கு எம்மை அழைத்தமைக்காக டயலொக் நிறுவனத்திற்கு நன்றிகளை தெரிவிக்கின்றேன் என்றார்.



படத்தில் (இடமிருந்து வலமாக):

சிரேஷ்ட ஊக்குவிப்பு மற்றும் செயற்பாடுகள் முகாமையாளர் (CBL உணவுக் குழுமம்) சிசிர குணவர்தன, சிரேஷ்ட முகாமையாளர் குழும தொடர்பாடல் மற்றும் நிலைத்தன்மை இஷாரா விக்ரமசிங்க, பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல் (CBL உணவுக் குழுமம்) ஜயங்க பெரேரா, CBL குழும முகாமைத்துவப் பணிப்பாளர் ஷியாமலி விக்ரமசிங்க, டயலொக் ஆசி ஆட்டா பிஎல்சி குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ, டயலொக் என்டர்பிரைஸ் குழும தலைமை அதிகாரி நவீன் பீரிஸ், சர்வோதய சிரமதான சங்கத்தின் நிறைவேற்று பணிப்பாளர் சமிந்த ராஜகருண ஆகியோரை காணலாம்.

# தமிழினப் படுகொலையின் 13ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பில் அனுஷ்டிப்பு










(மட்டக்களப்பு நிருபர்)

மே 18 தமிழ் இனப் படுகொடுகொலையின் 13ஆவது ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று (18) வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையுடன் மட்டக்களப்பில் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு காந்தி பூங்கா வளாகத்தில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் மே 18இல் முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளை நினைவுகூரும் முகமாக பொது ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றிருந்தது.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில் சமயத் தலைவர்கள், கிழக்கைச் சேர்ந்த போரினால் பாதிக்கப்பட்ட கிராமிய மட்ட மக்கள், கிராம மட்ட சிவில் அமைப்புகள், பெண்கள் அமைப்புகள், மீனவ மற்றும் விவசாய சங்கங்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் என பெருந்திரளானோர் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவினால் அறிக்கையொன்று வெளியிடப்பட்டிருந்ததுடன் அதில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

**தமிழ் இனப் படுகொலை நினைவேந்தல் தின அறிக்கை மே 18**

மே 18, 2022 ஆகிய இன்றைய நாளில், இலங்கையின் வடக்கு, கிழக்கைச் சார்ந்த போரினால் பாதிக்கப்பட்ட கிராமிய மட்ட மக்கள், கிராம மட்ட சிவில் அமைப்புகள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்களான நாங்கள் அனைவரும் போரினால் கொல்லப்பட்ட எமது அன்புக்குரியவர்களை நினைவுகூர்வதற்காக இங்கு கூடியிருக்கிறோம்.

இந்த நாட்டின் சிறுபான்மை இனமான வடக்கு, கிழக்கு வாழ் தமிழர்களான எங்கள் மீது அரசினால் ஏவப்பட்ட குரூர யுத்தத்தை மூன்று தசாப்தங்களாக அனுபவித்தோம். 2009ஆம் ஆண்டில் போரின் இறுதிக் கட்டத்தில் தொடர்ச்சியான செல் வீச்சுகள் மற்றும் வான் தாக்குதல்களின் காரணமாக பச்சிளம் பாலகர்கள், கர்ப்பிணத் தாய்மார், முதியவர்கள் அடங்கலாக பொதுமக்கள் பலரும் கொல்லப்பட்டனர். சிவிலியனின் இடங்கள் இலக்கு வைக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில், தாக்குதல் நடத்தப்படாது என அறிவிக்கப்பட்ட வலயத்துக்குள் இருந்த மக்கள் மீது இலங்கை அரசு இரசாயன குண்டுகளையும் கனரக ஆயுதங்களையும் பிரயோகித்தது. ஆதாரங்களுக்கமைய, இறுதி யுத்தத்தின்போது 40,000இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். பல்லாயிரக் கணக்கானோர் படுகாயமடைந்தனர், உடல் உறுப்புகளை இழந்தனர், உருச்சிதைவுக்கு உள்ளாகினர், பலர் இன்னும் உடல்களில் செல் துண்டுகளுடனும் சன்னங்களுடனும் வாழ்ந்து வருகின்றனர்.

உணவும் மருத்துவ வழங்கலும் தடைப்பட்டதால், பசியும் பட்டினியும் வியாபித்திருந்தது. மக்களுக்கு உப்பில்லாக் கஞ்சிதான் வழங்கப்பட்டது. கஞ்சி வாங்க கஞ்சி வழங்கும் இடத்துக்குச் சென்ற பிள்ளைகள் ஷெல் தாக்குதலுக்கு உள்ளாகினர். உணவுப்பொருள் பெற்றுக்கொள்ள வரிசையில் நின்ற பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் மீது வான் தாக்குதல் நடத்தப்பட்டது. மக்கள் தமது உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடும்போது கொல்லப்பட்ட தமது உறவுகளின் சடலங்களை அப்படியே விட்டுச்செல்ல நேர்ந்தது.

போரின் இறுதியில், ஆயிரக்கணக்கான இளம் ஆண்களும் பெண்களும் இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டனர். தமது பிள்ளைகளை திருப்பி அனுப்புவார்கள் எனும் நம்பிக்கையில் மக்கள் தமது பிள்ளைகளை இலங்கை இராணுவத்தினரிடம் ஒப்படைத்தனர். எனினும், சரணடைந்த, கைதுசெய்யப்பட்ட பலர் இன்னும் திரும்பி வராததுடன் அவர்கள் எங்குள்ளார்கள் என்பதும் தெரியாது, தமிழ்ச் சமூகம் இன்னும் கூட்டு உளவடுவால் துன்புற்றுக்கொண்டிருக்கிறது.

தமிழ்ச் சமூகம் கூட்டாக அனுபவித்த துன்பங்களும், இறுதி யுத்தத்தில் 40,000இற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டதும் ஓர் இனப்படுகொலையாக இன்னும் சர்வதேச சமூகத்தாலோ பின்னர் வந்த இலங்கை அரசாங்கங்களாலோ ஏற்று அங்கீகரிக்கப் படவில்லை. எனவே, தமிழ் இனப் படுகொலை நடைபெற்றதை ஏற்று அங்கீகரிக்குமாறு நாம் சர்வதேச சமூகத்தையும் இலங்கை அரசையும் கோருகிறோம். மேலும், நாம் பின்வருவனவற்றை பரிந்துரைக்கிறோம்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு ஒரு கௌரவமான அரசியல் தீர்வு வழங்க வேண்டும், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் குறித்த உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும், நீதி வழங்கப்பட வேண்டும், போர்க் குற்றங்களுக்கு இலங்கை அரசு பொறுப்புக் கூற வேண்டும், அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள அனைவரையும் உடன் விடுவிக்க வேண்டும், வடக்கு, கிழக்கில் இராணுவமயமாக்கலை முடிவுறுத்தல். அனைத்து வகையான காணி அபகரிப்புகளையும் உடன் நிறுத்த வேண்டும், சிறுபான்மை மக்களின் மத, கலாசாரத் தலங்களை ஆக்கிரமிப்பதை உடன் நிறுத்தவேண்டும், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டும்.

## மூதூரில் பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபருக்கு விளக்கமறியல்

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை, மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஒருவரை இம்மாதம் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மூதூர் நீதிமன்ற நீதிவான் நேற்று (18) உத்தரவிட்டார்.

ஆலீம் சேனை, மூதூர் பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் மூதூர் பகுதிகளில் கடைகளை உடைத்து திருடியமை, மோட்டார்சைக்கிள் திருடியமை, திருடிய பொருட்களை வைத்திருந்தமை மற்றும் இலத்திரனியல் சாதனங்கள் மற்றும் இரும்புப் பொருட்களை திருடி விற்பனை செய்தமை போன்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர் ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் தொடர்பாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய கைதுசெய்து மூதூர் பொலிஸார் மூதூர் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சாய்ந்தமருது தோணா வாவியில் நீர்க் களைகளால் சுகாதார சீர்கேடு



(நிந்தவூர் நிருபர்)

காரைதீவிலிருந்து ஆரம்பமாகி மாளிகைக்காடு, சாய்ந்தமருது ஊடாக குறுக்கறுத்து சாய்ந்தமருது முகத்துவாரத்தில் கலக்கும் தோணா வாவியில் நீர்க் களைகள் வளர்ந்து காணப்படுவதால் சுகாதார சீர்கேடுகள் இடம்பெற்று வருவதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தோணா வாவியை ஆற்றுவாழைகள் ஆக்கிரமித்து வளர்ந்துள்ளதால் டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளதுடன் தொற்று நோய்களும் பரவலாம் என்ற அச்சமும் மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது.

பகலிலும் இரவிலும் துர்நாற்றம் வீசுவதுடன் விஷ ஜந்துக்களின் நடமாட்டமும் அதிகரித்துள்ளது. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்துமாறு பிரதேசவாசிகள் கேட்டுள்ளனர்

## மட்டக்களப்பு மாவட்டத்தில் சாதாரண தரப் பரீட்சைக்கு 17 ஆயிரத்து 416 மாணவர்கள் தோற்றவுள்ளனர்

(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாண்டு நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு (2021/2022 மே மாத பரீட்சை) கடமையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களின் பணிக்குழுக்களுக்கான அறிவுறுத்தற் கூட்டம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் மட்டக்களப்பு சிசிலியா பெண்கள் தேசிய பாடசாலையில் மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாத்தா குலேந்திரகுமார் தலைமையில் நேற்று (18) காலை 9.00 மணியளவில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்வி அமைச்சின் பணிப்பாளர் எஸ்.பிரவணதாஸன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பரீட்சையை சிறப்பாக நடத்துவதற்குரிய சட்ட, வழிகாட்டல் ஆலோசனைகளை பல்லூடகத்தின் ஊடாக பரீட்சை கடமையில் ஈடுபடும் தெளிவூட்டல் வழங்கினார்.

மட்டக்களப்பு மேற்கு கல்விப் பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம், கல்குடா கல்விப் பணிப்பாளர் தினகரன் ரவி, மட்டக்களப்பு மத்தி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.செயிட் உமர் மௌலானா, மட்டக்களப்பு தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குமார ஹெட்டியாராச்சி, மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி, பிராந்திய சேகரிப்பு நிலைய இணைப்பாளர்கள், உதவி நிலைய இணைப்பாளர்கள், வலய மேற்பார்வையாளர்கள், பிராந்திய மேற்பார்வையாளர்கள், பரீட்சை இணைப்பு நிலையப் பொறுப்பாளர்கள், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள், உதவி பரீட்சை மேற்பார்வையாளர்கள் கலந்துகொண்டார்கள்.

இதன்போது பரீட்சைக்குரிய பாதுகாப்பு, கொவிட் சுகாதார வழிமுறைகள், பரீட்சையை எவ்வாறு சிறப்பாக நடத்துதல், வினாப்பத்திரங்களின் அமைப்பு, மாணவர்களை எவ்வாறு பரீட்சைக்கு அழைத்தல், நேரமுகாமைத்துவம், பரீட்சை நிலையங்களில் ஏற்படுகின்ற பிரச்சினைகளை தீர்த்தல், பரீட்சை அட்டவணைகள் சம்பந்தமான விடயங்கள், பரீட்சை மண்டப அறிவுறுத்தல்கள் உள்ளிட்ட பரீட்சைக்கான மேலதிக தகவல்கள் இங்கு தெளிவூட்டப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்காக 14 இணைப்பு நிலையங்களும், 125 பரீட்சை நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளதுடன் இப்பரீட்சைக்கு மாவட்டத்திலிருந்து 17,416 மாணவர்கள் தோற்றவுள்ளதாக பரீட்சைக்கான ஒன்றுசேர்க்கும் நிலையத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய இணைப்பாளர் திருமதி சுஜாத்தா குலேந்திரகுமார் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## கிழக்கின் பிரபல எழுத்தாளர் அல்ஹாஜ் செய்யிது காலமானார்



(மட்டக்களப்பு நிருபர்)

ஓய்வுபெற்ற அதிபரும், பிரபல எழுத்தாளரும், ஸலவாத்து மாலை நூலாசிரியரும், கிழக்கிலங்கை இஸ்லாமிய வலது குறைந்தோர் பாடசாலை ஸ்தாபகரும், பல விருதுகளை வென்ற இலக்கியவாதியும், அஹதியா இயக்கத்தின் ஆயுட்கால செயற்பாட்டாளருமான கலாபூஷணம் அல்ஹாஜ் எம்.ஏ.செய்யிது முஹம்மது நேற்று (18) அதிகாலை காலமானார்.

அன்னாரது ஜனாஸா நல்லடக்கம் காத்தான்குடி முகைதீன் மெத்தை பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடியில் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

இவர் சிரேஷ்ட ஊடகவியலாளரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தேசிய அமைப்பாளருமான மௌலவி எஸ்.எம்.எம்.முஸ்தபாவின் அன்பு தந்தையுமாவார்.

## சாய்ந்தமருது எம்.எஸ்.காரியப்பர் வித்தியாலய வித்தியாரம்ப விழா





(மாளிகைக்காடு நிருபர்)

கல்முனை கல்வி வலயத்தின் கீழுள்ள சாய்ந்தமருது எம்.எஸ்.காரியப்பர் வித்தியாலயத்தில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை வரவேற்கும் வித்தியாரம்ப விழா பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் ஏ.எல்.நாபீத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வலயக்கல்வி அலுவலக ஆரம்பக்கல்வி ஆசிரியர் ஆலோசகர் ஏ.சஹறூன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

மேலும், பாடசாலை பிரதி அதிபர் எம்.எஸ்.எம்.ஆரீப், உதவி அதிபர் ஏ.பீ.ஜஃபர், பகுதித் தலைவர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்ட இந்நிகழ்வில், அதிதிகளால் மாணவர்களுக்கு அகரம் எழுதப்பழக்கிய நிகழ்வும் இடம்பெற்ற அதேவேளை, மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் இனிப்புகளும் வழங்கப்பட்டன.

## இவ்வருடத்தின் முதலாவது டெங்கு மரணம் கிண்ணியாவில் பதிவு



(சீனக்குடா நிருபர்)

கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் நேற்று (18) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக ஊழியர்கள் முப்படையினரோடு இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்தனர். இதன்போது கருத்து தெரிவித்த கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.றிஸ்வி,

இந்த வருடத்தில் திருகோணமலை மாவட்டத்தில் முதலாவது டெங்கு மரணம் கிண்ணியாவில் ஏற்பட்டிருப்பதால் பொதுமக்கள் இது குறித்து அவதானமாக இருக்கவேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், கிண்ணியா பிரதேசத்தில் கடந்த சில தினங்களில் அதிகமான டெங்கு நோய் தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மே மாதம் 18ஆம் திகதிமுதல் 24ஆம் திகதிவரை நாடளாவிய ரீதியில் விசேட நுளம்பு கட்டுப்பாட்டு வாரமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வாரத்தை முழுமையாக பயன்படுத்தி டெங்கு நோயிலிருந்து நாம் பாதுகாப்புப் பெற வேண்டும்.

மேலும் இந்தப் பிரதேசத்தில் இன்று முதல் சுகாதார துறையினர், பொலிசார்,இரணுவ படையினர் மற்றும் கடற்படையினர் இணைந்து வீடுகளை சோதனைக்கு உட்படுத்த உள்ளனர்.



எனவே தயவுசெய்து தினமும் சிறிது நேரம் ஒதுக்கி வீட்டின் உற்புறம் மற்றும் சுற்றுப்புறங்களில் நுளம்பு பெருக சாத்தியமான இடங்களை சுத்தம் செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அநேக வீடுகளில் குளிர்சாதனப் பெட்டியின் பிற்பக்க நீர் தேங்கும் பகுதிகள், சமயலறையின் சிங் (sink) இன் கீழ்பக்க பகுதிகள், கூரையிலிருந்து கசிந்து வரும் மழைநீரை சேகரிக்க வைக்கும், பாத்திரங்கள், குளியலறையில் நீர் சேகரித்துவைக்க பாவிக்கப்படும் வாளிகள், நீர் தேங்கிநிற்கும் பூச்சாடிகள் ஆகிய இடங்களில் நுளம்பு குடம்பிகள் அவதானிக்கப்பட்டுள்ளன,

எனவே மேற்குறிப்பிட்ட இடங்களில் அதிக கவனம் செலுத்தி நுளம்புகள் பெருக இடமளிக்காமல் சுத்தம் செய்துகொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றேன். சுத்தம் செய்ய தவரும் பட்சத்தில் உரிமையாளருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றும் தெரிவித்தார்.

## பாடசாலை மாணவர்களுக்கு இரண்டாவது தடுப்பூசி ஏற்றும் பணிகள் முன்னெடுப்பு





(பாண்டிருப்பு நிருபர்)

கொரோனா தொற்றிலிருந்து மாணவர்களை பாதுகாக்கும் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கான இரண்டாவது பைஸர் தடுப்பூசி ஏற்றும் பணி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய களுவாஞ்சிக்குடி பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.இராஜேந்திரன் வழிகாட்டலில் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.யோகேஸ்வரன் ஒழுங்கமைப்பில் பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருகின்றன.

பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 12 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன. இதில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டு தடுப்பூசிகளை ஏற்றியமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!




தான் எந்தப்பக்கம் எண்டு தனக்கே தெரியாதாம் எண்டு பைத்தியகாரனைப்போல ரணில் சொல்லியிருக்காரு எலுவா. மெய்யா மெய்யா அவரு சொன்னது சரி தானே. தன்னம் தனியாக நாடாளுமன்றம் வந்து லோட்டறி ரிக்கட்டில அதிர்ஷ்டம் விழுந்த மாதிரி பிரதமர் பதவி கிடைச்சா அவருக்கே மனம் குழம்பிபோச்சு.. வலமா.. இடமா எண்டு கூட தெரியாமல்தான் அவரு இருக்காரு. இந்த லெட்சணத்தில எப்படி இலங்கைய கொண்டு இழுக்கப்போறாரோ கடவுளுக்குத்தான் வெளிச்சம்!

# கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றத்தில் பாரபட்சம்; உயரதிகாரிகள் தலையிட்டு தீர்வைத் தருமாறு கோரிக்கை

(மாளிகைக்காடு நிருபர்)

கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றத்தில் இம்முறை பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதென பாதிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.



கடந்த வாரம் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் 06/04/2022ஆம் திகதிய கடிதங்களின் பிரகாரம் வெளிவலயங்களுக்கான மேலதிக பதிலீட்டு ஆசிரியர்கள் இடமாற்ற மானது எந்தவித நிபந்தனை காலமும் இடப்படாமல் அனுப்பப்பட்டுள்ளது கவலையளிப்பதாக ஆசிரியர்களிடமிருந்து வருத்தம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதற்கு முன்னைய காலங்களில் வழங்கப்பட்ட வெளிவலய ஆசிரியர் இடமாற்றங்கள் யாவும் இரண்டு அல்லது மூன்று வருடங்கள் என நிபந்தனை காலம் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு வெளிவலயங்களுக்கு செல்லும் ஆசிரியர்கள் யாவரும் ஆகக் குறைந்தது 15 வருடங்கள் வேறு வேறு பாடசாலைகளில் சேவையாற்றியவர்கள் என்பதுடன், இவர்கள் இடமாற்றம் பெற்றுச்செல்லும் வலயங்களிலிருந்து மீண்டும் எப்போது தமது சொந்த வலயங்களுக்கு இடமாற்றப்படுவார்கள் என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் கடிதத்தில் குறிப்பிடப்படவில்லை என ஆசிரியர்களிடமிருந்து அறியமுடிகிறது.


அத்தோடு ஒரே காலத்தில் வழங்கப்பட்ட நியமனங்களில் ஒருசிலர் மாத்திரம் சொந்த இடங்களில் தங்களுக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி வேலை செய்யும்போது குறிப்பிட்ட சிலர் மாத்திரம் இவ்வாறான இடங்களில் மாட்டிக்கொண்டு மாகாண கல்வித் திணைக்களத்திற்கு சென்று வருவதே தமது வேலையாக மேற்கொண்டு வருகின்றனர்.

நாட்டில் தற்போதைய பொருளாதார நிலையை கருத்திற்கொண்டு கல்வி அமைச்சே ஆசிரியர் நியமனங்களை தங்களது சொந்த இடங்களில் வழங்குமாறு கூறும்போது மாகாண கல்வித் திணைக்களங்கள் பொருத்தமில்லாத வகையில் ஆசிரியர்களை தெரிவுசெய்து வெளிவலயங்களுக்கு இடமாற்றம் செய்வது வேதனையளிப்பதாக பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பில் மிகக்கூடிய கவனமெடுத்து வழங்கப்பட்ட இடமாற்றங்களுக்கு நிபந்தனை காலத்தை வழங்கி ஆசிரியர் சேவைக்கு கல்வி அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கிழக்கு மாகாண பிரதம செயலாளர், கல்வியமைச்சின் செயலாளர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுக்கொள்கின்றனர்.

# எட்டு நாட்களுக்குப் பின்னர் எரிபொருள் விநியோகம்

## திருமலையில் மக்கள் நீண்ட வரிசையில் அவதி







(கிண்ணியா நிருபர்)

எரிபொருளுக்கான தட்டுப்பாடு தொடரும் வேலையில் டீசலுக்கான தட்டுப்பாடும் ஒன்றாக காணப்படுகிறது. திருகோணமலை முள்ளிப்பொத்தானை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசலை பெறுவதற்காக பல தூரம் நீண்ட வரிசையில் வாகனங்கள் காத்திருந்தன. நேற்று முன்தினம் (17) மாலை டீசல் வந்ததன் காரணமாக அலைமோதி டீசலை பெற்றுவந்தனர்.


இருந்தபோதிலும் கடந்த 8 நாட்களுக்குப் பின்னர் டீசல் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு கிடைக்கப்பெற்றதாக தெரியவருகிறது. இதனால் கேன்களில் டீசலை பெறுவதற்காக அலை மோதி முந்தியடித்துக்கொண்டு வரிசை ஒழுங்கின்றி பெற்றுவந்த நிலையில், அவ்விடத்தில் இராணுவம் பொலிஸார் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது. முள்ளிப்பொத்தானை, தம்பலகாமம் போன்ற பிரதேசமானது நெற்செய்கை விவசாயத்தை கொண்ட பூமியாகும். தற்போது நெற்செய்கை மேற்கொள்வதற்காக இயந்திரங்களை பயன்படுத்தி உழவடிக்க வேண்டியுள்ளது. இதனால் டீசல் தேவைப்பாடு அதிகம் காணப்படுகிறது. ஆனால், எட்டு நாட்களின் பின்பே டீசல் வந்துள்ளது. அதற்கும் பலர் வரிசையில் காத்திருக்கின்றனர். இதனால் கிடைக்குமோ என சந்தேகமாகவுள்ளது.

டீசல் இல்லாவிட்டால் நெற்செய்கை விவசாயத்தை மேற்கொள்ள முடியாது எனவும் விவசாயி ஒருவர் தெரிவித்தார். தங்களது வயலை உழுவ வேண்டியதாக இருந்தால் இயந்திரத்துக்கு டீசலை தாங்களே பெற்றுக்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. டீசலை பெற வாகனங்கள் பல நீண்ட வரிசையில் காத்திருக்கின்றன. இது தவிர கேன்களில் டீசல் பெற பலர் கேன்களுடன் காத்திருக்கின்றனர். இதனால் பல மணிநேரம் வீணடிக்கப்படுவதாக தொழில்செய்யும் வாகனதாரிகள், இயந்திர தொழில்தாரிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு எப்போது தீர்வு கிட்டும் என அங்கலாய்க்கின்றனர்.

# வாழைச்சேனை கமநல திணைக்களத்தினால் விவசாயிகளிடம் கட்டாயத்தின்பேரில் 300 ரூபாவுக்கு மாங்கன்று விற்பனை

## போராட்டத்துக்குத் தயாரான விவசாயிகள்

(கல்குடா நிருபர்)



வாழைச்சேனை கமநல சேவை திணைக்களத்தினால் உரம் விநியோகம் மற்றும் நஷ்ட ஈட்டுக்கு பதிவதற்கு கட்டாயம் திணைக்களத்தில் பொருட்கள் கொள்வனவு செய்ய வேண்டும் என கூறியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வாழைச்சேனை கமநல சேவை திணைக்களத்திற்கு முன்பாக சில விவசாயிகள் நேற்று முன்தினம் மேற்கொள்ளவிருந்த போராட்டம் கைவிடப்பட்டது.

வாழைச்சேனை கமநல சேவை திணைக் களத்தின் கீழ் 29 விவசாய அமைப்புகள் உள்ளன. அதில் 7252 பி.எல்.ஆர். காணிகள் உள்ளன. விவசாயிகளுக்கு வழங்குவதற்காக மயிலம்பாவெளி பாமிலிருந்து மாங்கன்று கொள்வனவுசெய்து விவசாயிகளுக்கு கட்டாயத்தின்பேரில் ஒரு கன்று 300 ரூபாவுக்கு விற்பனை செய்தமை காரணமாகவே விவசாயிகள் போராட்டம் செய்வதற்குத் தயாரான நிலையில் ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

வாழைச்சேனை கமநல சேவை திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் விவசாயிகளுக்கிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் விரும்பினால் மாத்திரம் மரக்கன்றுகளை கொள்வனவு செய்யுங்கள் என வாழைச்சேனை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.ஜெயகாந்தன் கூறியதற்கிணங்க விவசாயிகள் போராட்டம் நடத்தாமல் கலைந்து சென்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ஆசிரியர் சேவையிலிருந்து எம்.ஏ.அச்சி முஹம்மது ஓய்வு

(பொலிவேரியன் நிருபர்)

35 வருடங்களாக அரசியல் விஞ்ஞான ஆசிரியராக கல்வி உலகில் வலம் வந்த சிறந்த ஆசான் எம்.ஏ.அச்சி முஹம்மதுக்கு பிரிய மனமின்றி ஒரு பிரியாவிடை வைபவம் நேற்று முன்தினம் (17) பாடசாலையின் கேட்போர் கூடத்தில் மிக விமர்சையாக நடைபெற்றது.

கல்லூரியின் முதல்வர் ஏ.அப்துல் கபூர் தலைமையில் நிந்தவூர் அல்-அஷ்றக் தேசிய பாடசாலை உருவாக்கிய எல்லா மாணவர்களும் விரும்பும் ஆசிரியரான பகுதித் தலைவர் எம்.ஏ.அச்சி முஹம்மதை கௌரவப்படுத்தும் இந்நிகழ்வு, பாடசாலை முகாமைத்துவக் குழுவினர், பாடசாலை ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர், பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

பேராதனைப் பல்கலையில் பெயர்பெற்ற மாணவனாக கலைப்பட்டத்தைப் பூர்த்தி செய்து, அரசியல் விஞ்ஞான ஆசிரியராக நியமனம் பெற்று, 1986இல் அல்-அஷ்றக் தேசிய பாடசாலையில் சேவை வாழ்வை ஆரம்பித்தார்.



ஆசிரியர் குழாத்தின் செயலாளராக, இல்லங்களின் பொறுப்பாளராக, இல்ல விளையாட்டின் பொருளாளராக, பகுதித் தலைவராக, ஒழுக்காற்றுப் பிரிவுத் தலைவராக, முகாமைக் குழு செயலாளராக, பாடசாலை அபிவிருத்திக்குழு செயலாளராக என பல பாத்திரங்களை வகித்தார்.

35 ஆண்டுகள் மும்முரமாக கல்விப் பணியாற்றி இடையில் நான்கு ஆண்டுகள் கல்முனை பத்திமா கல்லூரியிலும் கடமை புரிந்துள்ளார்.

தனது 60ஆவது வயதில் ஓய்வுபெற்றுச் செல்லும் ஆசிரியர் எம்.ஏ.அச்சி முஹம்மதை கௌரவப்படுத்துவதில் நிந்தவூர் அல்-அஷ்ரக் கல்விச் சமூகம் பெருமை கொள்கிறது.

# யுத்தம் முடிவடைந்து 13 ஆண்டுகள் கடந்தும் 13 பிளஸ் தொடர்பில் பேச்சுவார்த்தை இல்லை

## கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம்





(ஆலையடிவேம்பு நிருபர்)

அம்பாறை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் (17) மாலை நடைபெற்றது.

அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப் பிள்ளையார் ஆலயம் முன்பாக இடம்பெற்ற அம்பாறை மாவட்ட முன்னாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் கல்முனை மாநகர சபை உறுப்பினர் மு.சந்திரசேகரம், ஆலையடிவேம்பு பிரதேச தமிழரசுக் கட்சியின் தலைவர் ஆர்.ஜெகநாதன், ஆலையடிவேம்பு பிரதேச தமிழ் இலக்கியப் பேரவைத் தலைவர் க.கிருஸ்ணமூர்த்தி உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள், ஆலயத் தலைவர்கள், இந்து அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் முள்ளிவாய்க்கால் உள்ளிட்ட பல்வேறு சம்பவங்களின்போது உயிர்நீத்த உறவுகளை நினைவுகூர்ந்து நினைவுச்சுடர் ஏற்றப்பட்டது.

இதன்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்டவர்கள் நினைவுச்சுடர்களை ஏற்றிவைத்தனர். பின்பு உயிர்நீத்த உறவுகளின் ஆத்மாசாந்தி வேண்டி இரு நிமிட பிரார்த்தனையும் இடம்பெற்றது. தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய கல்முனை மநாகர சபை உறுப்பினர் மு.சந்திரசேகரம்,

தற்போதைய பிரதமர் இறந்தவர்களை நினைவுகூர தடையில்லை என்றார். ஆனால், முள்ளிவாய்க்காலில் நினைவேந்தலை நடத்த முடியாது இராணுவத்தினர் பல்வேறு நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றனர். அவர்கள் எவ்வாறு தடையினை வைத்தாலும் சகல மக்களும் வீடுகளில் அமைதியான முறையில் நினைவேந்தல் நிகழ்வினை முன்னெடுக்க வேண்டும் - என கோரிக்கை விடுத்தார்.

இங்கு உரையாற்றிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், யுத்தம் முடிவடைந்த பின்னர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்கும்போது 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு மேல் சென்று வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு தீர்வை பெற்றுத்தருவேன் என உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் கூறினார். ஆனாலும் இதுவரையில் 13 பிளஸ் தொடர்பாக யுத்தம் முடிவடைந்து மக்களை பலிகொண்டு 13 வருடங்கள் நிறைவடைந்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில் சிங்கள மக்களே இன்று அவரை துரத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் அன்று தமிழ் மக்கள் பட்ட துயரை அவர் இன்று அனுபவிக்கின்றார். அன்று அவர் வடக்கு, கிழக்கில் வாழ்ந்த மக்களை துரத்தியடித்தார். ஆனால், இன்று வடக்கு, கிழக்கின் தாயகமான திருகோணமலையில் அவர் தஞ்சம் புகுந்துள்ளார். மக்கள் இறைவனிடம் வேண்டிகொண்டதற்கிணங்க இந்தத் தண்டனை அவருக்கு வழங்கப்பட்டுள்ளது - என்றார்.

# தமிழர்களை அழிக்கவேண்டும் என்பதைத் தவிர ஆட்சியாளர்களிடம் நல்ல நோக்கம் இல்லை

## நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசன் சாடல்

(மட்டக்களப்பு நிருபர்)

மாறி மாறி வந்த அரசாங்கங்கள் தமிழர்களை அழிக்கவேண்டும் என்ற அடிப்படையில் பல யுத்திகளைக் கையாண்டனவே தவிர, எந்த அரசியல் தலைவர்களிடமும் ஒரு நல்ல நோக்கம் இருக்கவில்லை - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.

கல்முனையில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நாட்டின் வடக்கு, கிழக்கு தாயகத்தில் மட்டுமல்லாது உலகத்திலே பல நாடுகளிலும் முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் அம்பாறை மாவட்டம், கல்முனை மாநகரில் கல்முனை மாநகர சபை உறுப்பினர்களால் நேற்று (18) முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நாட்டில் ஒரு நிலையான சமாதானம் ஏற்பட வேண்டும். இங்கு வாழ்கின்ற தமிழர்களுக்கு சமத்துவம், நீதி, நியாயம் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் தமிழ் மக்கள் போராடியிருந்தார்கள். அந்தப் போராட்டம் ஜனநாயக ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் 2009இற்கு முற்பட்ட காலத்தில் இருந்தது. இதில் கவனம் செலுத்தாத இந்த அரசாங்கம் தமிழர்களை அழிக்க வேண்டும் என்ற அடிப்படையில் பல யுத்திகளைக் கையாண்டு இலட்சக்கணக்கான மக்களை ஓர் இடத்தில் கொத்துக் கொத்தாக அழித்த நாளாக இன்றைய நாளை நாங்கள் அனுஷ்டித்துக்கொண்டு வருகின்றோம்.



இந்த நாட்டில் தமிழினத்திற்கு ஏற்பட்ட இந்த அவலநிலை இந்த நாட்டில் வாழ்கின்ற எந்த இனத்திற்கும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவும், இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்கள் தங்களது கலாசாரத்தை, இருப்பை நிலைநிறுத்த வேண்டும் என்பதற்காகவும் போராடியவர்கள். ஆனால், இந்த நாட்டை ஆண்டுவந்த எந்த அரசியல் தலைவர்களிடமும் ஒரு நல்ல நோக்கம் இருக்கவில்லை.

அன்று முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட எமது உறவுகளுக்கு இதுவரை எந்தத் தீர்வும் கிடைக்கப்பெறவில்லை. சர்வதேச ரீதியாக வழங்கப்படுகின்ற ஆலோசனைகளைக் கூட ஏற்று இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை உலக நாடுகளும் அறிந்துகொண்டுள்ளன.

அந்தவகையில் இந்த நாட்டில் வாழ்கின்ற பூர்வீக இனம் தொடர்ச்சியாக இவ்வாறான அடக்கு முறைக்கு ஆளாகக்கூடாது என்ற அடிப்படையில் எங்களுடைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக எமது மண்ணில் ஏற்பட்ட அவலங்களை நினைவுகூர்ந்து இவ்வாறான நிகழ்வுகளை நடத்திக்கொண்டிருக்கின்றோம்.

நிச்சயமாக தமிழர்களுக்கு ஒரு நிலையான சமாதானம் கிடைக்கப்பெற வேண்டும் என்ற எங்களது ஜனநாயக ரீதியான போராட்டம் தொடர்ந்துகொண்டே இருக்கும். இந்த அடிப்படையில், இப்போது வாழ்கின்ற எமது இளைய சமூகம் எமது மண்ணில் எமது இனம் வாழ்வதற்காக ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்.

அவ்வாறு வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணத்தில் தமிழர்கள் மட்டுமல்லாது ஏனைய இனங்களும் இணைந்து சமத்துவமான ஒரு அரசியல் கட்டமைப்பினை உருவாக்குவதற்கு முன்னின்று உழைக்க வேண்டும் - என்றார்.

# எரிவாயு விநியோக நடவடிக்கைகள் விரைவில் வழமைக்குத் திரும்பும்



## வரிசையில் காத்திருக்க வேண்டாமென லிட்ரோ நிறுவனம் அறிவிப்பு

சமையல் எரிவாயு விநியோக நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்ப மேலும் மூன்று நாட்கள் காலதாமதமாகுமென லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலையினால் கடலின் சீற்றம் அதிகரித்துள்ளதால், கப்பலிலிருந்து எரிவாயுவை இறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாகவே எரிவாயு விநியோக நடவடிக்கைகளில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் தலைவர் விஜித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

எது எவ்வாறாயினும், அந்தக் கப்பலை கொழும்புத் துறைமுகத்துக்கு எடுத்துவர தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதுடன், அதன்போது கப்பலிலுள்ள எரிவாயுவை பவுசரினூடாக தரையிறக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

திட்டமிட்டப்படி நாளாந்த எரிவாயு விநியோக நடவடிக்கைகளை வழமைபோல் முன்னெடுப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, எரிவாயு பெற்றுக்கொள்வதற்காக வரிசையில் காத்திருப்பதை மக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

இன்றைய தினம் (19) மேலுமொரு எரிவாயு கப்பலொன்று நாட்டுக்கு வரவுள்ளது. இருந்தபோதிலும், தற்போது நிலவும் சீரற்ற காலநிலையின் காரணமாக அதன் நடவடிக்கைகளை முறையாக முன்னெடுக்க முடியாதநிலை உருவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இரண்டு எரிவாயு கப்பல்களுக்கு நேற்று முன்தினம் இரவு பணம் செலுத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கடின உழைப்பால் நாட்டை கட்டியெழுப்புவோம்!

## மக்கள் காங்கிரஸ் செயலாளர் நாயகம் சுபைர்தீன் சுட்டிக்காட்டு

வருமான எல்லைக்குள் வாழ்வை அமைத்துக் கொண்டு விவசாயம், கைத்தொழில், சேவைகள், கல்வி ஆகிய துறைகளை தியாக நோக்கோடு கடின உழைப்பால் அபிவிருத்தி செய்வதன் மூலம் நாட்டை சுபீட்சம் அடையச்செய்ய வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் செயலாளர் நாயகம் எஸ்.சுபைர்தீன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

நாட்டில் தற்போது நிலவும் அரசியல் பொருளாதார நெருக்கடியின் பின்னணியில் அண்மையில் பதவியேற்ற பிரதமர் ரணில் விக்ரமசிங்க, அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கு பணம் அச்சிடப்பட வேண்டியுள்ளது என்றார்.

2021இல், நவீன நாணய கோட்பாட்டின் அடிப்படையில் அச்சிடப்பட்ட பணத்தின் (நாணயத் தாளின்) பெறுமதி 1.2 டிரில்லியன் ரூபாவாகும். கோடிகளில் ஒரு கோடியே இருபது இலட்சமாகும். 2022இல் அச்சிடப் படவுள்ள பணத்தாளின் பெறுமதி 2.78 டிரில்லியன் ரூபாவாகும். இதுவரை அச்சிடப் பட்ட பணத்தின் மொத்த பெறுமதி 558 பில்லியன் ரூபாவாகும்.

ஒரு நாட்டின் பெறுமதி அந்நாட்டின் 'மொத்த உள்நாட்டு உற்பத்தி" யை அடிப்படையாகக் கொண்டே மதிப்பிடப்படுகின்றது. ஒரு நாட்டின் உற்பத்திப் பொருட்களினதும் சேவைக ளினதும் மொத்தப் பெறுமதியே GDP மொத்த உள்நாட்டு உற்பத்தி எனப்படும். (இதுவரை சுரண்டப்படாத மூல வளங்கள் தவிர்ந்த)

இலங்கையின் மொ.உ.உ. 2020இல் 80.71 பில்லியன் டொலராகவும் 2021 இல் 81 பில்லியன் டொலராகவும் இருந்தது. 2022இல் அது 83 பில்லியனாகலாம் எனக் கருதப்படுகின்றது. உலக பொருளாதா ரங்களோடு ஒப்பிடும்போது இலங்கையின் மொ.உ.உ. 0.007 சதவீதமாகும்.

அச்சிடப்படும் பணத்தால் பண நிரம்பல் அதிகரிக்கப்படுகின்றது. மேலும் வங்கிகளினால் வைப்புச் செய்யப்பட வேண்டிய "ஒதுக்கீட்டு வீதம்" மத்திய வங்கியால் குறைக்கப்படும் போது, வங்கித்துறையின் திரவத்தன்மை மேலும் அதிகரிக்கப்படுகின்றது.

இது பணவீக் கத்தை இன்னும் அதிகரிக்க வழிவகுக்கின்றது. அச்சிடப்படும் பணத்தொகையின் பெறுமதிக் குச் சமமான பொருளாதார உற்பத்தி ஏற்படா விட்டால் அது பணவீக்கத்தை அதிகரிக்கும். அதிகரிக்கும் பணவீக்கம் ரூபாவின் பெறுமதியை குறைக்கச் செய்யும். மறுபுறம் அது வெளிநாட்டு நாணயங்களின் பெறுமதியை அதிகரிக்கச் செய்யும். இது இறக்குமதிப் பொருட்களின் விலைகளை அதிகரிக்கச் செய்யும்.



ஏற்றுமதி வருமானத்தை விட, இறக்குமதி செலவுகள் அதிகமாயின் வெளிநாட்டுச் செலாவணித் தட்டுப்பாடு- பற்றாக்குறை ஏற்படும்.

பணம் என்பது கொடுக்கல் வாங்கலுக்கான ஊடகம் மட்டுமே. அதன் பெறுமதி என்பது உள்நாட்டு உற்பத்தியிலும் வெளிநாட்டு நாணய செலாவணி நிலுவையிலுமே தங்கியுள்ளது.

எல்லை கடந்த பண அச்சிடல் "மிகையான பண வீக்கத்தை" ஏற்படுத்தும். உற்பத்தி ஸ்தம்பித்த நிலையில் அளவு கடந்து பண அச்சிடல் நடைபெறுமாயின் "மிகச் சொற்ப அளவிலான பொருட்களை மிக அதிகமான பணம் துரத்துவதற்குச் சமமாகும்."

இந்த விபரீதமான பண வீக்கம் 1923ஆம் ஆண்டு ஜேர்மனியில் ஏற்பட்டது. 1922-23 ஆண்டுகளில் இருந்த ஜேர்மனியின் "வீமார் அரசாங்கம்" தொழில் பகிஷ்கரிப்பு நடத்திக்கொண்டிருந்த தொழிலாளர்களுக்குப் பணம் வழங்குவதற்காக வங்கி நோட்டுகளை அச்சிட்டுக்கொண்டிருந்தது. தங்கத்தின் பெறுமதியைக் கொண்டிராத இந்த நோட்டுகளால் பணத்தின் மதிப்பு செயலிழந்தது. 1923 ஜனவரி மாதம் 250ஆக இருந்த ஒரு இறாத்தல் பாணின் விலை, அதே வருடம் நவம்பர் மாதம் 200,000 பில்லியனாக உயர்ந்தது.

இதேபோல் ஸிம்பாவ்வே இந்த ஒரு வருடத்திற்குள் மாத்திரம் 100 பில்லியன் ஸிம்பாப்வே டொலர்களை அச்சிட்டுள்ளது. இந்த வருடம் ஜனவரியில் 60.6 சதவீதமாகவிருந்த பண வீக்கம் பெப்ரவரி மாதம் 66.1 சதவீதமாக உயர்ந்தது.

பண வீக்கத்தை ஏற்படுத்தும் பண அச்சிடல் என்பதை "வசியப்படுத்தப்படாத பிசாசு" என நவீன பொருளியலாளர்கள் கூறுகின்றனர். கட்டுப்பாடாகக் கையாளப்படாவிட்டால் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்கிறார்கள்.

வருமான எல்லைக்குள் வாழ்வை அமைத்துக் கொண்டு, விவசாயம், கைத்தொழில், சேவைகள், கல்வி ஆகிய துறைகளை தியாக நோக்கோடு கடின உழைப்பால் அபிவிருத்தி செய்வதன் மூலம் நாட்டை சுபீட்சம் அடையச்செய்வோமாக.

# சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டிக்கு தமிழ் மாணவன் தெரிவு



(மு.தமிழ்ச்செல்வன்)

சர்வதேச 63ஆவது கணித ஒலிம்பியாட் போட்டிக்கு இலங்கை சார்பாக வடமாகாணத்தில் தெரிவாகிய ஒரே ஒரு தமிழ் மாணவன் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த தெய்வேந்திரம் திருக்குமரனுக்கு நேற்று (18) பாடசாலை சமூகத்தால் கௌரவிக்கப்பட்டார்.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் அதிபர் ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் இவர் கௌரவிக்கப்பட்டார். எதிர்வரும் ஜூலை மாதம் நோர்வேயின் ஒஸ்லோ நகரத்தில் குறித்த போட்டி நடைபெறவுள்ள நிலையில் இலங்கையிலிருந்து ஆறு மாணவர்கள் தெரிவாகியுள்ளனர். அவர்களில் ஐந்து சிங்கள மாணவர்களும் ஒரு தமிழ் மாணவன் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# டெங்கு ஒழிப்பு வாரம் ஆரம்பம்

டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்தும்நோக்கில் நேற்று (18) முதல் மே 24ஆம் திகதி வரை, நாடு முழுவதும் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக, டெங்கு நோய் ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இத்திட்டத்தின் மூலம் இனங்காணப்பட்ட அதிக ஆபத்துள்ள பகுதிகளில் இராணுவம், பொலிஸார் மற்றும் ஏனைய சுகாதாரப் பணியாளர்களின் உதவியுடன் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும், இதற்காக பொதுமக்களின் பங்களிப்பு எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேல் மாகாணத்தில் கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் பதிவாகிய நோயாளர்களின் எண்ணிக்கை மே மாதத்தில் 43 சதவீதத்துக்கு அதிகமாகும். காலி, திருகோணமலை, யாழ்ப்பாணம், கண்டி, மட்டக்களப்பு, களுத்துறை, கேகாலை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் அதிகமான நோயாளர்கள் பதிவாகி வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# எரிபொருள் விநியோகத்தின்போது விவசாயிகளுக்கு முதலிடம்

## அரசாங்கம் விசேட கவனம்

எரிபொருள் விநியோக நடவடிக்கைகளின் போது, விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அநுராதபுர மாவட்ட விவசாயக் குழுக்கள் முன்வைத்த கோரிக்கைகளை கவனத்திற் கொண்டு, அதற்கான வேலைத்திட்டங்கள் மாவட்ட செயலாளர் ஜனக்க ஜயசுந்தரினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சிறுபோக செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டிருந்தாலும், அதற்காக பயன்படுத்தப்படும் ட்ரெக்டர் இயந்திரங்களுக்கான எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையால், விவசாயிகள் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளதாக விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வை பெற்றுத் தருமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதன்படி, மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான எரிபொருளை வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக அநுராதபுர மாவட்ட செயலாளர் ஜனக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

# மறைந்த அரபு இராஜ்ஜியத்தின் மன்னர் அல்-நஹ்யானுக்கு சஜித் இரங்கல் தெரிவிப்பு






ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் மறைந்த மன்னர் மர்ஹூம் ஷெய்க் கலீபா பின் சயீத் அல்- நஹ்யானுக்கு இரங்கல் தெரிவிப்பதற்காக எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச, நேற்று முன்தினம் (17) கொழும்பிலுள்ள ஐக்கிய அரபு இராஜ்ஜிய தூதகரத்திற்குசென்று உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் ஐக்கிய அரபு இராஜ்ஜிய மக்களுக்கும் தனது இரங்கலைத் தெரிவித்ததுடன், அங்கிருந்த அனுதாப பதிவேட்டில் தமது அனுதாபச் செய்தியையும் பதிவிட்டார்.


தொடர்ந்து ஐக்கிய அரபு இராஜ்ஜிய தூதுவரோடு இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்கள் குறித்து நீண்ட நேரம் கலந்துரையாடினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்றுச் சிறப்புமிக்க நட்புறவை நினைவு கூர்ந்த எதிர்க்கட்சித் தலைவர், இலங்கையை கட்டியெழுப்புவதற்கு ஐக்கிய அரபு இராஜ்ஜியம் ஆதரவளிக்குமாறும் அழைப்பு விடுத்தார்.

இந்நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட பிரதித்தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்காரும் கலந்து கொண்டிருந்தார்.

# குஞ்சுக்குளம் சுற்றுலா மையம் பாழடைந்த நிலையில்









## பிரதேச மக்கள் கடும் விசனம்

(மன்னார் நகர் நிருபர்)

மடு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குஞ்சுக்குளம் தொங்கு பாலம் பகுதியில், கடந்த 2014ஆம் ஆண்டு வடமாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் அமைக்கப் பட்டு திறந்து வைக்கப்பட்ட சுற்றுலா மைய கட்டிடத்தொகுதி பாழடைந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

குறித்த கட்டிடத் தொகுதியில் உள்ள பொருட்கள் உடைக்கப்பட்டுள்ளமைக்கு பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2014ஆம் ஆண்டு வடமாகாண சபையின் குறித்தொதுக்கப்படட அபிவிருத்திக் கொடை நிதி உதவியில் குஞ்சுக்குளம் தொங்கு பாலம் பகுதியில் அமைக்கப்பட்ட சுற்றுலா மையம் கடந்த 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16ஆம் திகதி வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் அதிகாரிகளினால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

மடு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குறித்த சுற்றுலா மையம், நானாட்டான் பிரதேச சபையின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த சுற்றுலா மையம் தற்போது அடர்ந்த காடு போல் காட்சியளிப்பதோடு, குறித்த மைய கட்டிடத்தொகுதி சேதமாக்கப்பட்டுள்ளதோடு, பொருட்களும் உடைக்கப்பட்டுள்ளன.

பல இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப் பட்டு பாவனைக்காக கையளிக்கப்பட்டு சுமார் 6 வருடங்கள் ஆகியுள்ள நிலையில், இவ்வாறு சேதப்படுத்தப்பட்டு மக்கள் பாவனை இன்றி காணப்படுகின்றமை குறித்து உரிய அதிகாரிகள் கவனயீனத்துடன் செயல்படுகின்றமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக நானாட்டான் பிரதேச சபை துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மக்கள், நலன் விரும்பிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# விடுதலையானார் பேரறிவாளன்: முடிந்தது 31 ஆண்டுகால சிறைவாசம்

## வென்றது ஒரு தாயின் சட்டப்போராட்டம்



ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று சிறையில் இருந்த பேரறிவாளனை விடுதலை செய்து வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை இந்திய உயர் நீதிமன்றம் நேற்று வழங்கியுள்ளது.

தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி பேரறிவாளனை உச்ச நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது. இது பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாளின் சட்டப்போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றியாகவே பார்க்கப்படுகிறது. இதன்மூலம் பேரறிவாளனின் 31 ஆண்டுகால சிறைவாசம் முடிவுக்கு வந்துள்ளது.

பேரறிவாளனின் விடுதலை என்ற தீர்ப்பையடுத்து தாய் அற்புதம்மாள், சகோதரி உள்ளிட்டோர் ஆனந்தக்கண்ணீரில் திளைத்துள்ளனர். தாய், சகோதரி உள்ளிட்டோர் பேரறிவாளனுக்கு இனிப்புகளை ஊட்டி நெகிழ்ச்சியடைந்தனர்.

தீர்ப்பு குறித்து பேசிய தாயார் அற்புதம்மாள், “பேரறிவாளன் விடுதலை; இந்த தீர்ப்பு எப்பொழுதோ கிடைத்திருக்க வேண்டும், இது காலதாமதம்தான். ஆனால், மகிழ்ச்சி. மகிழ்ச்சியை வெளிப்படுத்த வார்த்தைகள் இல்லை'' - என்றார்.

மேலும், ''நாங்கள் பேரறிவாளன் விடுதலைக்காக 31 ஆண்டுகள் போராட்டம் நடத்தினோம். போராட்டத்துக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இந்த 31 ஆண்டுகாலம் ஒருவர் சிறையில் கழிக்க வேண்டும் என்பதை ஒரு விநாடி சிந்தித்தால் அந்த வலி அனைவருக்கும் புரியும். பேரறிவாளனுக்கு தொடர்ந்து பரோல் வழங்கிய தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பரோல் வழங்கியதால் எனது மகனின் உடல்நிலையை நான் நன்றாக கவனிக்க முடிந்தது. வலியும், வேதனையுமான 31 ஆண்டுகால சிறைவாசத்தை எனது மகன் கடந்து வந்துள்ளார். எனது மகனின் விடுதலைக்காக குரல் கொடுத்த அனைவருக்கும் நன்றி'' - என்றார்.

''பேரறிவாளன் விடுதலைக்காக பாடுபட்ட அத்தனை பேருக்கும் மிக்க நன்றி'' என்று பேரறிவாளனின் தந்தை குயில்தாசன் தெரிவித்துள்ளார்.

எங்கள் குடும்பத்துக்கு இன்றுதான் மிக மகிழ்ச்சியான நாள் என்று பேரறிவாளனின் உறவினர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். பேரறிவாளனின் தீர்ப்பையடுத்து, அவரது சொந்த ஊரான ஜோலார்பேட்டையில் உறவினர்கள் இனிப்பு வழங்கி கொண்டாடி வருகின்றனர். கோவையில் கு.ராமகிருட்டிணன் தலைமையில் பட்டாசுகள் வெடித்துக் கொண்டாட்டம் நடந்து வருகிறது.

அதுமட்டுமன்றி, அரசியல் தலைவர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் என பலரும் பேரறிவாளனின் விடுதலை தீர்ப்பை வரவேற்று தமது கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.

**19 வயதில் கைது; 50 வயதில் விடுதலை**

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிபிஐயால் பேரறிவாளன் கடந்த 1991ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11ஆம் திகதி தனது 19ஆவது வயதில் கைது செய்யப்பட்டார். கொலையாளிகளுக்கு இரு பேட்டரிகளை வாங்கி கொடுத்தற்காக கைது'செய்யப்பட்ட பேரறிவாளன், 26 ஆண்டுகளாக சிறையை விட்டு வெளியே வர முடியாமலிருந்தார்.

இந்நிலையில், நீதிமன்றத்தால் பேரறிவாளனுக்கு வழங்கப்பட்ட தூக்குத் தண்டனை, கடந்த 2014ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது.

இதற்கிடையே பேரறிவாளனின் தந்தை ஞானசேகரன் என்ற குயில்தாசன் உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்ததால், கடந்த 2017ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஒரு மாதம் பரோல் வழங்கப்பட்டது. பின்னர், மேலும் ஒரு மாதம் பரோல் கேட்டு அரசிடம் வலியுறுத்தப்பட்டது. இதையடுத்து அந்த பரோல், மேலும் ஒரு மாதம் நீடிக்கப்பட்டது. அதற்கு முன்புவரை பேரறிவாளன், ஒரு முறை கூட பரோலில் சிறையிலிருந்து வெளியே வந்தது கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

**தாயார் அற்புதம்மாள்**

பேரறிவாளனை இந்த வழக்கிலிருந்து விடுவிப்பதற்கான சட்டப் போராட்டத்தை அவரது தாயார் அற்புதம்மாள் நடத்திவந்தார். தாயார் அற்புதம்மாளின் சட்டப் போராட்டத்தை வெறும் சட்டப் போராட்டமாக மட்டும் பார்த்துவிட முடியாது. ஒரே மகன் சிறைக்கம்பிகளுக்குப் பின்னாலிருக்கும் வலியோடு ஒரு தாயாக ஒரு மிகப்பெரிய வழக்கிலிருந்து மகனை விடுதலை செய்ய வேண்டும் என்ற நெஞ்சுரத்தோடு நடத்திய போராட்டம்.

1991ஆம் ஆண்டு ஜூன் 11ஆம் திகதி தொடங்கிய இந்தப் போராட்டம்தான், இன்று (நேற்று) உச்ச நீதிமன்றம் பேரறிவாளனை விடுதலை செய்வதாக தீர்ப்பளிக்கும் வரை கொண்டுவந்திருக்கிறது.

அதுவும் தனது முதுமையையும் தாண்டி அவர் ஓரிடத்தில் கூட இந்தப் போராட்டத்தின் வேகத்தைக் குறைக்காமல், கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்புகளையும் பயன்படுத்தி, தனது மகனை சிறைக்கம்பிகளுக்குப் பின்னாலிருந்து வெளியே கொண்டுவந்து சுதந்திரக் காற்றை சுவாசிக்க வைக்க அவர் எடுத்த நடவடிக்கைகள் நிச்சயம் அவரால் மட்டுமே முடியும், முடிந்தது என்று சந்தேகத்துக்கு இடமின்றி சொல்லிவிடலாம்.

தமிழகத்திலுள்ள பெரும்பாலான அரசியல் கட்சியினரும், பேரறிவாளனை விடுதலை செய்யவேண்டும் என வலியுறுத்தி வந்தனர். தமிழகத்தை ஆளும் தி.மு.க. அரசும், பேரறிவாளனை விடுதலை செய்ய தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பியது. அது தாமதப்படுத்தப்பட்ட நிலையில், பேரறிவாளன், தன்னை விடுதலை செய்யுமாறு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

மாநில அரசின் தீர்மானத்தை ஆளுநர் இறுதியாக குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தார். இதற்கும், உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை சூடுபிடிக்கவும் சரியாக இருந்தது. இந்த வழக்கின் விசாரணையின்போது, மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பல்வேறு கேள்விகளை எழுப்பியிருந்தனர்.

**விடுதலை அறிவிப்பு**

இறுதியாக இரு தரப்பு வாதங்களும் நிறைவடைந்து, சட்டப்பிரிவு 142ஐ பயன்படுத்தி உச்சநீதிமன்றம் நேற்று விடுதலை செய்து உத்தரவிட்டது.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் படுகொலை வழக்கில் ஆயுள்தண்டனை





அனுபவித்து வருகின்றனர் பேரறிவாளன், சாந்தன், முருகன், நளினி, ஜெயக்குமார், ரொபர்ட் பயஸ், ரவிச்சந்திரன். இவர்கள் 7 பேரையும் விடுதலை செய்ய 2014ஆம் ஆண்டு தமிழக முதலமைச்சராக இருந்த மறைந்த முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையிலான அமைச்சரவை கூடி தீர்மானித்தது. ஆனால், சிபிஐ விசாரித்த வழக்கு என்பதால் 7 தமிழர்கள் விடுதலையில் தாங்களே இறுதி முடிவெடுப்போம் என்றது மத்திய அரசு.

இதனைத் தொடர்ந்து 2016ஆம் ஆண்டு தம்மை இந்த வழக்கிலிருந்து முன்கூட்டியே விடுதலை செய்யக் கோரி உச்சநீதிமன்றத்தில் பேரறிவாளன் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் நாகேஸ்வரராவ், பி.ஆர்.கவாய், ஏ.எஸ்.போபண்ணா அமர்வு நேற்று (மே 18) தீர்ப்பு வழங்கியது. அதில், ஆளுநர் முடிவு எடுக்காமல் தாமதப்படுத்தியது தவறு எனக் கருத்து தெரிவித்ததோடு, சட்டப்பிரிவு 142ஐ பயன்படுத்தி பேரறிவாளனை விடுதலை செய்து உத்தரவிட்டது.

**உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு**

உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பில், ஆளுநர் காலதாமதம் செய்ததால் நீதிமன்றமே தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி விடுவிக்கிறது. அரசியல் சாசனப் பிரிவு 161இன்படி மாநில அரசு எடுத்த முடிவை ஆளுநர் செயல்படுத்தவில்லை. ஆளுநர் காலதாமதம் செய்தது தவறு. ஆளுநர் முடிவெடுக்காமல் குடியரசுத் தலைவருக்கு அனுப்பிவைத்தது அரசியலமைப்பு சட்டப்படி தவறு. ஆளுநர் செயற்படாத விவகாரம் நீதிமன்ற விசாரணைக்குட்பட்டது.

பேரறிவாளன் விடுதலை விவகாரத்தில் மத்திய அரசின் கருத்தை பெறத் தேவையில்லை. முழுமையாக ஆராய்ந்த பின்னரே பேரறிவாளனை விடுவிக்க தமிழக அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றியது. மாநில அரசின் தீர்மானத்தை தாமதப்படுத்த யாருக்கும் அதிகாரம் இல்லை. பேரறிவாளன் விவகாரத்தை மீண்டும் ஆளுநர் பரிசீலனைக்கு அனுப்ப விரும்பவில்லை. பேரறிவாளனை உடனடியாக விடுதலை செய்யவேண்டும். ஆளுநர் காலதாமதம் செய்ததாலேயே உச்சநீதிமன்றம் இந்த முடிவை எடுத்துள்ளது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கடந்து வந்த பாதை**

★ முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதான பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரின் தூக்குத்தண்டனை கடந்த 2014இல் ஆயுள்தண்டனையாக குறைக்கப்பட்டது.

★ தொடர்ந்து, 30 ஆண்டுகளாக சிறையிலுள்ள பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேர் விடுதலையில் தமிழ்நாடு அரசே முடிவெடுக்கலாம் என்ற உச்சநீதிமன்ற உத்தரவையடுத்து சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பப்பட்டது.

★ அதன்மீது 2 ஆண்டுகளாக முடிவெடுக்காமல் இருந்த ஆளுநர் குடியரசுத் தலைவருக்கே அதிகாரம் உள்ளதாக உள்துறை அமைச்சு மூலமாக உச்சநீதிமன்றத்தில் அறிக்கை அளித்தார்.

★ அதேசமயம் குற்றமே நிரூபிக்கப்படாமல் 30 ஆண்டுகளாக சிறையிலுள்ள தன்னை விடுதலை செய்யக் கோரி கடந்த 2020ஆம் ஆண்டு பேரறிவாளன் வழக்கு தொடர்ந்தார். 10 மாதங்களாக பரோலில் இருந்த பேரறிவாளனுக்கு கடந்த மார்ச் மாதம் பிணை வழங்கி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

★ பேரறிவாளனை விடுதலை செய்யும் அதிகாரம் யாருக்கு இருக்கிறது என்ற வாதத்திற்கு இடையே அவர் ஏன் சிறையில் இருக்க வேண்டும் என்று கேட்ட நீதிபதிகள், நீதிமன்றமே விடுதலை செய்ய நேரிடும் என்று கூறினர்.

★ மாநில அமைச்சரவையின் முடிவிற்கு ஆளுநர் கட்டுப்பட்டவர் என்ற கூறிய நீதிமன்றம், தீர்மானத்தை குடியரசுத் தலைவருக்கு அனுப்பியது அரசியலமைப்புச் சட்டத்தை மீறும் செயல் எனவும் தெரிவித்தது.

★ உச்சநீதிமன்ற நீதிபதிகள் எல்.நாகேஸ்வரராவ், பி.ஆர். கவாய், ஏ.எஸ். போபண்ணா ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் அமர்வு நேற்று மேற்கண்ட வழக்கில் தீர்ப்பு வழங்கியது.

**முதலமைச்சர் ஸ்டாலின்**

32 ஆண்டுகாலமாக சிறையிலிருந்த பேரறிவாளன் விடுதலை செய்த உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு வரலாற்றில் இடம்பெறக்கூடிய தீர்ப்பு. தமிழக அரசின் மூத்த வழக்கறிஞர் அளித்த வாதங்களை முழுமையாக ஏற்றுக்கொண்டு இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டமை வரவேற்கத்தக்கது. அதேநேரத்தில் மாநிலத்தின் உரிமை, இந்த தீர்ப்பு மூலம் நிலைநாட்டப்பட்டுள்ளது. மாநில அரசின் கொள்கையில், அதன் முடிவில், ஆளுநர் தலையிட அதிகாரம் இல்லை என நீதிபதிகள் தெரிவித்துள்ளார். இது முக்கியமான ஒன்று. ஆளுநர் செயற்படாத நேரத்தில் நீதிமன்றம் செயற்படும் என நீதிபதிகள் தெரிவித்துள்ளனர். மாநில அரசின் அரசியல் கொள்கை முடிவில் தாண்டி ஆளுநர் தலையிட அதிகாரம் இல்லை என்பது உறுதியாகியுள்ளது. இந்தத் தீர்ப்பு மாநிலத்தின் சுயாட்சிக்கு கிடைத்த மாபெரும் வெற்றி. பேரறிவாளனுக்கும், அவரது தாயாருக்கும் வாழ்த்துகள். மாநில உரிமைகளும் நிலை நாட்டப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது. நீதிமன்றத்தின் தீர்ப்பு முழுமையாக வந்த பின்னர், 7 பேரின் விடுதலை தொடர்பாக சட்ட நிபுணர்களுடன் பேசி முடிவு எடுக்கப்படும். - இவ்வாறு ஸ்டாலின் தெரிவித்தார்.

**அ.தி.மு.க.**

அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் பழனிசாமி வெளியிட்ட அறிக்கையில், பேரறிவாளன் விடுதலை, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் துணிச்சலுக்கும் தொலைநோக்கு சிந்தனைக்கும் சட்ட ஞானத்துக்கும் கிடைத்த மகத்தான வெற்றி. ஜெயலலிதா சட்டப் போராட்டத்தை தளராது முன்னெடுத்து, அப்போதைய அரசு மேற்கண்ட அயராத முயற்சிகளின் நிறைவாக பேரறிவாளனை உச்சநீதிமன்றம் விடுதுலை செய்துள்ளது. - இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**ம.தி.மு.க., பொது செயலர் வைகோ**

பேரறிவாளன் விடுதலை எல்லையற்ற மகிழ்ச்சியை தருகிறது. எந்த தவறும் செய்யாமல், இந்த இளைஞருடைய இளமைக்கால வாழ்க்கை சீர்குலைக்கப்பட்டுவிட்டது. பேரறிவாளன் விடுதலை விவகாரத்தில் உச்சநீதிமன்றம் நீதியை நிலைநாட்டியுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது.

**வி.சி.க. தலைவர் தொல். திருமாவளவன்**

பேரறிவாளனுக்கு 30 ஆண்டுகளாக இழைக்கப்பட்ட அநீதி வீழ்த்தப்பட்டது என்று வி.சி.க. தலைவர் தொல். திருமாவளவன் வாழ்த்து தெரிவித்துள்ளார். ஒரு நிரபராதிக்கு எதிராக அநீதிக்கு காரணமானவர்களுக்கு சட்டம் என்ன தண்டனை வழங்கப்போகிறது? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். வாழ்விழந்து பாதிக்கப்பட்டுள்ள பேரறிவாளனின் மறுவாழ்வுக்கு மத்திய அரசு என்ன செய்யப்போகிறது? எனவும் வினவியுள்ளார்.

**தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை**

பேரறிவாளனை உச்சநீதிமன்றம், அரசியலமைப்புச் சட்டம் 142இன் சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி விடுதலை செய்திருக்கும் தீர்ப்பை தமிழக பா.ஜ.க, ஏற்றுக்கொள்கிறது. நம் ஒற்றுமையையும், பாதுகாப்பையும், ஒருமைப்பாட்டையும் சமரசம் செய்வதற்கு உச்சநீதிமன்றம் அனுமதிக்காது என்றும் நம்புகின்றோம்.

**தமிழக காங்கிரஸ் தலைவர் அழகிரி**

முன்னாள் பிரதமர் ராஜீவை கொன்ற கொலையாளிகள் 7 பேரை உச்சநீதிமன்றம்தான் கொலையாளிகள் என்று கூறி தண்டனை கொடுத்தது. அதே உச்சநீதிமன்றம் சில சட்ட நுணுக்கங்களை சொல்லி பேரறிவாளனை விடுதலை செய்திருக்கிறது. உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை நாங்கள் விமர்சிக்க விரும்பவில்லை. அதேநேரத்தில் குற்றவாளிகள் கொலைகாரர்கள் என்பதையும், அவர்கள் நிராபரதிகள் அல்ல என்பதையும் நாங்கள் அழுத்தமாகக் கூற விரும்புகிறோம்.

## “ஒவ்வொரு முறை வீழும் போதும் என் தாயை பார்க்க நான் அஞ்சுவேன்”



விடுதலை செய்யப்படுவதாக உச்ச நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்த நிலையில், செய்தியாளர்களை சந்தித்த பேரறிவாளன், எல்லாருக்கும் வணக்கம் என்று கூறி, ''அவ்விய நெஞ்சத்தான்..'' என்ற திருக்குறளை மேற்கோள்காட்டி பேசத்தொடங்கினார்.

31 ஆண்டுகள் சிறைவாசத்தைத் தொடர்ந்து, உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டிருக்கும் பேரறிவாளன், சுதந்திரக் காற்றை சுவாசித்தபடி, முதல் முறையாக செய்தியாளர்களை சந்தித்தார்.

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையில் செய்தியாளர்களை சந்தித்த பேரறிவாளன் கூறியதாவது,

“அனைவருக்கும் வணக்கம்.

“அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்'' என்பது திருக்குறள்.

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கம்.. கெட்டவர்கள் நன்றாக வாழ்வதும், செவ்வியான் கேடும்.. நல்லவர்கள் வீழ்ந்து போவது, துன்பத்தில் ஆழ்த்தப்படுவதை உலகம் நினைத்துப் பார்க்கும் என்பது பொருள். அது இயற்கையின் நீதியா. இல்லை. நல்லவன் வாழணும், கெட்டவன் வீழ்வதுதான் நீதி. என்னுடைய சிறை வாழ்க்கையும் அதுபோலத்தான்.

என் விடுதலையை தமிழ் மக்களும், தமிழர்களும் நினைத்தார்கள். அன்பு செலுத்தினார்கள். ஆதரவு தெரிவித்தார்கள். தங்களது வீட்டில் ஒரு பிள்ளையாக நினைத்தார்கள்.

31 ஆண்டுகாலம் எங்கள் அம்மாவின் தியாகம், போராட்டம், ஆரம்பக் காலங்களில் அவர் வெளியில் சந்தித்த அவமானங்கள், புறக்கணிப்புகளை சந்தித்து, வேதனை.. அதையெல்லாம் கடந்து, இடைவிடாது போராட்டம் நடத்தியிருக்கிறார்கள்.

இந்த பெரிய வலிமை கிடைத்தது எப்படி? எங்கள் பக்கம் இருந்த உண்மை, நியாயம், இந்த பெரிய வலிமையைக் கொடுத்தது என்று நம்புகிறேன்.

மார்க்சிம் கார்க்கி எழுதிய தாய் நாவலை படித்திருக்கிறேன். எனது 18ஆவது வயதில் படித்தேன். சிறைக்கு வந்த பிறகும் படித்தேன். தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட பின்னரும் படித்தேன். ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு உணர்வை அது தந்தது. பிறகு, தாய் நாவலுடன் எனது தாயை ஒப்பிட்டேன். இதுவரை அவரிடம் நான் இதனைக் கூறியதில்லை. எனது தாயாரின் இந்த சட்டப் போராட்டத்துக்குப் பின்னால், என் ஒட்டுமொத்த குடும்பத்தின் ஆதரவும் உள்ளது. சகோதரிகள், சகோதரியின் கணவர்கள் எல்லாருடைய பலம்தான் இன்று இந்த வெற்றி.

எனது வழக்கில் ஒரு திருப்புமுனையாக இருந்தது வழக்கை விசாரித்த அதிகாரி தியாகராஜன் ஐபிஎஸ், எனது வாக்குமூலத்தை அப்படியே எழுதவில்லை என்றும், அதனை மொழிபெயர்த்ததில் குளறுபடி ஏற்பட்டதையும் வெளிப்படையாக பேட்டி கொடுத்து, அதனை வாக்குமூலமாக உச்ச நீதிமன்றத்தில் பதிவு செய்ததும் அமைந்திருந்தது.

31 ஆண்டு சட்டப் போராட்டத்தின்போது ஒவ்வொரு முறை வீழும் போதும் எனது தாயாரை பார்க்க நான் அஞ்சுவேன். எனது விடுதலைக்காக உயிர் தியாகம் செய்த செங்கொடியின் தியாகம்தான் மக்கள் மத்தியில் எனக்கான ஆதரவை அதிகரித்தது.

எனக்கு சிறைத்துறை முதல் காவல்துறை என பலரும் ஆதரவு அளித்தனர். தமிழக அரசு அதன் முழுமையான ஆதரவை அளித்து எனது விடுதலைக்காக வாதாடியது. நன்றி சொல்லவேண்டியவர்களின் பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது. அனைவரையும் நேரில் சந்தித்து எனது நன்றியை தெரிவித்துக் கொள்வேன். தமிழக முதலமைச்சரை நேரில் சந்தித்து எனது நன்றியை தெரிவிப்பேன்'' என்று தெரிவித்துள்ளார்.

மேலும், எனது விடுதலைக்காக போராடி வரும் தனது தாய் - தந்தை உயிருடன் இருக்கும் போதே நான் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற எண்ணம் இருந்துகொண்டே இருந்தது என்றும் பேரறிவாளன் குறிப்பிட்டார்.

# மூன்று வருடங்களின் பின்னர் இலங்கை அணியில் மீண்டும் தர்ஜினி



13ஆவது ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடருக்கான இலங்கை வலைப்பந்தாட்ட குழாத்தில் தமிழ்பேசும் வீராங்னையான தர்ஜினி சிவலிங்கம் மீண்டும் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

ஆசியாவின் அதி உயரமான வலைப்பந்தாட்ட வீராங்கனையும், ஒரு சுற்றுப் போட்டியில் அதிக கோல்கள் போட்ட சாதனையாளருமான தர்ஜினி சிவலிங்கம், இங்கிலாந்தில் 2019இல் நடைபெற்ற உலகக் கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டியிலேயே கடைசியாக இலங்கைக்காக விளையாடியிருந்தார்.

கடந்த 2020ஆம் ஆண்டு தென் கொரியாவில் நடைபெறவிருந்த 12ஆவது ஆசிய கிண்ண வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடர் கொரோனா தொற்று காரணமாக இரத்துச் செய்யப்பட்டிருந்த நிலையில், 13ஆவது தொடர் சிங்கப்பூரில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ளது. இதற்கான இலங்கை அணியின் குழாமில் 3 வருடங்கள் கழித்து தர்ஜினி சிவலிங்கம் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

மேலும் அனுபவம் வாய்ந்த வீராங்கனையும், முன்னாள் அணித் தலைவியுமான செமினி அல்விஸும் குழாத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார். அவுஸ்திரேலியாவில் 2015இல் நடைபெற்ற உலகக் கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டியில் விளையாடிய பின்னர் தேசிய குழாத்தில் செமினி அல்விஸ் இடம்பெறுவது இதுவே முதல் தடவையாகும். அத்துடன், 7 வீராங்கனைகள் முதல் தடவையாக இலங்கை வலைப்பந்தாட்டக் குழாத்தில் பெயரிடப்பட்டுள்ளனர்.

மரிஷா பெர்னாண்டோ, தீப்பிகா தர்ஷனி, சுரேக்கா கமகே ஆகியோர் குழாத்தில் இடம்பெறுகின்றபோதிலும் அவர்கள் மூவரினதும் உடற்தகுதியின் அடிப்படையிலேயே இறுதி அணியில் இடம்பெறுவது தீர்மானிக்கப்படும்.

**இலங்கை வலைப்பந்தாட்டக் குழாம்**

சத்துராங்கனி ஜயசூரிய, செமினி அல்விஸ், துலாஞ்சலி வன்னிதிலக்க, திசலா அல்கம, ஹசித்தா மெண்டிஸ், லக்மாலி பண்டார, கயாஞ்சலி அமரவன்ச, இதுஷா ஜனனி, சுசிமா பண்டார, திலினி வத்தேகெதர, ரஷ்மி திவ்யாஞ்சலி, அகிலா சஞ்சி, மல்மி ஹெட்டிஆராச்சி, ஹாஷினி டி சில்வா, தர்ஜினி சிவலிங்கம்.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# "அந்த ஐ.பி.எல். இறுதிப்போட்டி என்னை நொறுக்கிவிட்டது"

## 2016ஆம் ஆண்டை நினைவுகூரும் வொட்சன்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், நட்சத்திர துடுப்பாட்ட வீரருமான விராட் கோஹ்லி பல ஆண்டுகளாக ஐ.பி.எல். தொடரில் ஆர்.சி.பி. அணியில் தலைவராக செயற்பட்டும் அவரால் அந்த அணிக்கு சம்பியன் பட்டத்தை வென்றுகொடுக்க முடியவில்லை. இதுவொரு மிகப்பெரிய குறையாகவே பார்க்கப்படுகிறது.

இதுவரை 14 ஐ.பி.எல். சீசன்களில் ஒருமுறை கூட பெங்களூர் அணி கிண்ணத்தை வெல்லவில்லை.

குறிப்பாக, 2016ஆம் ஆண்டு ஐ.பி.எல். தொடரின் இறுதிப் போட்டியில் பெங்களூர் அணி 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. அந்த சீசனில் அணியின் தலைவர் விராட் கோஹ்லி சிறப்பான பேட்டிங்கை வெளிப்படுத்தியிருந்தார். அந்த ஆண்டு மட்டும் அவர் 4 சதங்களுடன் 973 ஓட்டங்களை குவித்தார்.

இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய செய்த ஹைதராபாத் அணி 208 ஓட்டங்கள் குவித்தது. பதிலுக்கு ஆடிய பெங்களூர் அணிக்கு கோஹ்லி சிறப்பான தொடக்கம் அமைத்துக் கொடுத்தார். இருப்பினும், அந்த அணி 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்து கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பை இழந்தது. இந்நிலையில், தற்போது அந்தப் போட்டி குறித்து பெங்களூர் அணியின் முன்னாள் வீரர் ஷேன் வொட்சன் பேசியுள்ளார்.

"2016 ஐ.பி.எல்லில் நான் பெங்களூர் அணியில் ஆடினேன். அந்த ஐ.பி.எல். இறுதிப் போட்டி என்னை நொறுக்கிவிட்டது. அந்த இறுதிப் போட்டியில் அணி வெற்றிபெறுவது எவ்வளவு முக்கியம் என்பது எனக்குத் தெரியும். அந்த சீசன் முழுவதும் அணி சிறப்பாக விளையாடியது. விராட் கோஹ்லி அந்த சீசனில் அற்புதமான ஃபார்மில் ஆடினார்.

ஆனால், அந்த போட்டியில் எனது அந்த ஒரு ஓவர் என்னை வெகுவாக பாதித்தது. மிகச்சிறந்த வீரரான கோஹ்லி அன்று ஐ.பி.எல். சம்பியன் பட்டத்தை வெல்ல அருமையான வாய்ப்பிருந்தது. அதேமாதிரி நடந்துவிடக்கூடாது என்ற உறுதியுடன் 2018 ஐ.பி.எல். இறுதிப் போட்டியில் ஆடினேன்'' - என வொட்சன் தெரிவித்தார்.

குறித்த இறுதிப் போட்டியில் ஷேன் வொட்சன் வீசிய முக்கியமான ஓவரில் அவர் ஓட்டங்களை வாரி வழங்கினார். தற்போது அந்த ஓவரை அவர் நினைவுகூர்ந்து பேசியுள்ளார்.

# ஸ்டெய்னை முந்திய ரபாடா



இந்தியன் ப்ரீமியர் லீக் வரலாற்றில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய தென்னாபிரிக்க வீரர் என்கிற பெருமையை பஞ்சாப் கிங்ஸ் அணியில் விளையாடிவரும் வேகப்பந்து வீச்சாளர் ககிஸோ ரபாடா பெற்றுள்ளார்.

2017 முதல் ஐ.பி.எல். போட்டியில் விளையாடிவரும் ரபாடா, இதுவரை 62 ஆட்டங்களில் 98 விக்கெட்டுகளை எடுத்துள்ளார். ஐ.பி.எல். 2022 ஏலத்தில் ரபாடாவை ரூ. 9.25 கோடிக்குத் தெரிவு செய்தது பஞ்சாப் கிங்ஸ் அணி.

டெல்லி கெப்பிட்டல்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் ரபாடா 1 விக்கெட் எடுத்தார். இதன் மூலம் ஐ.பி.எல். வரலாற்றில் அதிக விக்கெட்டுகள் எடுத்த தென்னாபிரிக்க வீரர் என்கிற பெருமையை அடைந்துள்ளார். இதற்கு முன்பு டேல் ஸ்டெய்ன் 97 விக்கெட்டுகள் எடுத்திருந்தார்.

**ஐ.பி.எல்: அதிக விக்கெட்டுகள் எடுத்த தென்னாபிரிக்க வீரர்கள்**

98 - ரபாடா
97 - டேல் ஸ்டெய்ன்
95 - கிறிஸ் மோரிஸ்
85 – அல்பி மோர்கல்
82 - இம்ரான் தாஹிர்

# செஸ் ஒலிம்பியாட்டில் ரஷ்யாவுக்குத் தடை!




உலக நாடுகள் கொண்டாடும் சதுரங்கத்தின் உலகக்கிண்ணம் என வர்ணிக்கப்படும் செஸ் ஒலிம்பியாட் போட்டி முதல் முறையாக தமிழ்நாட்டில் நடைபெறவுள்ளது. சுமார் 200 நாடுகளைச் சேர்ந்த உலகின் மிகச் சிறந்த 2000இற்கும் மேற்பட்ட செஸ் வீரர்கள் ஒருங்கே சங்கமிக்கும் இந்த மௌன யுத்தம் ஜூலை 28ஆம் திகதிமுதல் ஒகஸ்ட் 10ஆம் திகதி வரை மாமல்லபுரத்தில் நடத்தப்படவுள்ளது.

ரஷ்யா - உக்ரைன் போரால் தமிழ்நாட்டுக்கு கிடைத்த இந்தத் தொடரில் ரஷ்யா பங்கேற்கத் தடை தொடரும் என இந்தப் போட்டியை நடத்தக்கூடிய இயக்குனரும் அகில இந்திய செஸ் கூட்டமைப்பின் செயலாளருமான பரத் சிங் சவுகான் தெரிவித்துள்ளார். மேலும் இதுவரை 137 நாடுகளைச் சேர்ந்த 250 ஆடவர் மற்றும் மகளிர் அணிகள் பதிவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஆசிய பரா விளையாட்டுப் போட்டி ஒத்திவைப்பு



Hangzhou 2022
Asian Para Games

(ரமணி)

ஹாங்சோவில் இந்த ஆண்டு நடைபெறவிருந்த ஆசிய பரா விளையாட்டுப் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. அண்மையில் கொவிட்-19 குறித்த அச்சம் காரணமாக சீன நகரத்தில் ஆசிய விளையாட்டுப் போட்டிகளை தாமதப்படுத்தும் நடவடிக்கையைத் தொடர்ந்து இந்த முடிவு தவிர்க்க முடியாததாக இருந்தது.

ஆசிய பரா விளையாட்டுப் போட்டி ஒக்டோபர் 9 மற்றும் 15இற்கும் இடையில் நடைபெறவிருந்தது. ஆனால், இப்போது அடுத்த ஆண்டு நிகழ்வை மீண்டும் ஏற்பாடு செய்ய பேச்சுவார்த்தை நடத்தப்படும். ஆசிய பாராலிம்பிக் கமிட்டி, சீன பாராலிம்பிக் குழு, ஹாங்சோ ஆகியவற்றை உள்ளடக்கிய பணிக்குழு விளையாட்டுகளை நடத்துவதற்கு பொருத்தமான இடத்தைக் கண்டறியும். எனினும், விளையாட்டுகளின் சின்னம், முழக்கம் மற்றும் ஆண்டு மாறாமல் இருக்கும் என்று அறிவித்துள்ளது.

22 விளையாட்டுகளில் 616 பதக்க நிகழ்வுகளில் 4,000இற்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் போட்டியிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது, இது நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஜகார்த்தாவில் நடந்ததை விட பெரியது. இந்த ஆண்டு டிசம்பர் 20 முதல் 28 வரை சீனாவின் சாந்தோ நகரில் நடைபெறவிருந்த ஆசிய இளைஞர் விளையாட்டுப் போட்டிகளும் இரத்துச்செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் கடுமையான கொவிட்-19 காரணமாக சீனாவில் பல முக்கிய விளையாட்டு நிகழ்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன அல்லது இரத்துச்செய்யப்பட்டுள்ளன. ஆசிய விளையாட்டு மற்றும் ஆசிய பரா விளையாட்டு தவிர, செங்டுவில் நடைபெறவிருந்த கோடை கால உலக பல்கலைக்கழக விளையாட்டுகள் அடுத்த ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

# முதல் இந்திய வேகப்பந்துவீச்சாளரான பும்ரா



மும்பை இந்தியன்ஸ் அணியின் வேகப்பந்துவீச்சாளரான ஜஸ்பிரிட் பும்ரா இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டிகளில் 250 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் இந்திய வேகப்பந்துவீச்சாளர் என்ற பெருமையை பெற்றார்.

மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 65ஆவது லீக் போட்டியில் ஹைதராபாத் அணி வீரர் வொஷிங்டன் சுந்தரின் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் குறித்த பெருமையை பெற்றார். இந்தப் பட்டியலில் 223 விக்கெட்டுகளுடன் புவனேஸ்வர் குமார் 2ஆவது இடத்தில் உள்ளார்.

ஒட்டுமொத்தமாக இந்தப் பட்டியலில் பும்ரா 5ஆவது இடத்தில் உள்ளார். அதாவது, பும்ராவுக்கு முன்னதாக 250 விக்கெட்டுகள் வீழ்த்திய இந்திய வீரர்கள் பட்டியலில் ரவிச்சந்திரன் அஷ்வின் (274), யுஸ்வேந்திர சாஹல் (271), பியுஷ் சாவ்லா (270), அமித் மிஸ்ரா (262) என 4 சுழல்பந்துவீச்சாளர்கள் உள்ளனர்.

# இன்றைய போட்டி




# இளையோர் சதுரங்க சம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்க அம்பாறை மாவட்டத்திலிருந்து 7 மாணவர்கள் தெரிவு

(நிந்தவூர் நிருபர்)

புரோ நைட்ஸ் சதுரங்க அகடமியின் 7 செஸ் வீரர்கள் தேசிய மட்ட செஸ் போட்டிக்கு அம்பாறை மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இலங்கை தேசிய இளையோர் சதுரங்க சம்பியன்ஷிப் போட்டியின் அம்பாறை மாவட்ட மட்டத்திலான 8 வயதிற்குட்பட்ட மற்றும் 14 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான தெரிவு போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன.



14 வயதிற்குட்பட்ட திறந்த போட்டியில் ஏ.ஏ. பர்விஸ் சம்பியனாகவும், ஐ.கே.முஹம்மட் ஆகில் கான் இரண்டாவது இடத்தையும், எம்.இஸட்.எம். ஸானிப் மூன்றாம் இடத்தையும், எம்.ஜே.ஐ. ஸஹ்மி நான்காமிடத்தையும் பெற்று தேசிய மட்ட போட்டிக்கும் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன், 8 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் என்.எம்.பாதிஹ் சம்பியனாகவும், எம்.ஏ.எம்.மஹ்தி இரண்டாவது இடத்தையும், கே.என்.எஸ்.நஜ்தி மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7